விலை சதம் 15

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆவணி 14 வெள்ளி (30-8-68) ஜ: ஆகி: 5 புத்தகம் 22 இதழ் 47




அடுத்த தேர்தலில் எந்தத் தொகுதியை யாருக்கு விட்டுக் கொடுப்பது?

# வடபகுதி இடதுசாரிகள் கடும் மோதல்

அடுத்த பொதுத்தேர்தலில் எந்தத் தொகுதியை யாருக்கு விட்டுக் கொடுப்பது என்பதை நிர்ணயிப்பதில் வட பகுதியிலுள்ள இடதுசாரிக் கட்சிகளிடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சியினர் தமக்குத் தான் அதிக செல்வாக்கு வடபகுதியில் இருப்பதாகவும் தாமே அதிக இடங்களுக்கு போட்டியிடவேண்டுமெனவும் ஒரு பக்கம் விடாப் பிடியாக இருந்து வருகையில் சமசமாஜக் கட்சியினர் தமக்கே அதிக இடம் தரப்படவேண்டுமென வற்புறுத்தி வருகின்றனர் என்று தெரிகிறது. இந்தக் குடுமிபிடிச் சண்டையை தென்னிலங்கையிலுள்ள இரு கட்சிகளின் எசமானர்களும் தீர்த்து வைப்பதற்கு படாதபாடு பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

## போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்ய தமிழ் காங்கிரஸ் முயற்சி?


அடுத்த பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் இருந்தபோதிலும், வடபகுதியில் உள்ள இடதுசாரித் தலைவர்கள், இப்பொழுதே தங்களுக்குள் தொகுதி கோரி மல்லுக்கட்ட ஆரம்பித்துவிட்டார்களாம். முக்கியமாக, பருத்தித்துறை, நல்லூர், உடுவில் காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளைப் பெறுவதில் இரு கட்சிகளுக்கும் போட்டி கடுமையானதாக இருப்பதாக தெரிகிறது.

அண்மையில்பொதுத்தேர்தலில் போட்டியிடும் நோக்கத்துடன் ஆசிரியப் பதவியிலிருந்து இளைப்பாறிய கம்யூனிஸ்ட் பிரமுகர் ஒருவர், காங்கேசன்துறை, அல்லது உடுவிலில் தாம் போட்டியிட்டே தீருவது என்று கூறிவிட்டாராம். இத்தொகுதிகளை கம்யூனிஸ்டு கட்சிக்கு விட்டுக்கொடுக்க சமசமாஜக் கட்சிக்கு சிறிதும் இஷ்டமில்லையாம்.

விரைவில் இப்போட்டியைத் தீர்த்து வைப்பதற்கு இக்கட்சிகளின் தென்னிலங்கை எசமானர்கள் வடக்கு நோக்கி வரப் போகிறார்கள் என்று அறியப்படுகிறது.

இதற்கிடையில் தமிழ் காங்கிரஸ் கட்சியும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் வடபகுதியில் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்ய முயன்றுவருவதாகவும், இம்முயற்சியில் இடதுசாரி கட்சிகளிலிருந்து தமிழ் காங்கிரசுக்குள் ஊடுருவல் செய்துள்ள சில கற்றுக்குட்டிகள் இறங்கியிருப்பதாகவும் தெரிகிறது. ஆரம்பத்தில் யாழ். மாநகர சபைத் தேர்தலின்போது இப்படியொரு ஒப்பந்தம் செய்யப்படுமாம். தமிழரசுக் கட்சிக்கு எதிரான வாக்

(9-ம் பக்கம் பார்க்க)




"நினைத்ததும் நடந்ததும்"

## திணைக்களத்தை "பகுதி" யாக மாற்ற முயற்சி

திணைக்களம் என்று தற்போது புழக்கத்திலிருந்து வரும் தூய தமிழ் சொல்லை மீண்டும் 'பகுதி' யென மாற்றுவதற்கு அரசகரும மொழித் திணைக்களத்தில் பணியாற்றும் சில தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் முயல்கிறார்களாம்!

அண்மையில், தொழிற்றிணைக்களத்துக்கு ஓர் புதிய பெயர்ப் பலகை தேவை வந்தபோது அரசகரும மொழித் திணைக் களத்திலுள்ள ஓர் மொழி பெயர்ப்பு அதிகாரி, 'தொழிற் பகுதி' என்று எழுதுமாறு சிபார்சு செய்துள்ளாராம்.

திணைக்களம் என்ற தூய தமிழ் சொல்லை புறக்கணிக்கத் துணிந்த குறித்த மொழி பெயர்ப்பாளர் தமிழ் மொழிக்கு பாமாலை சூட்டிய ஈழத்தின் முதிய புலவர் ஒருவரின் ''மொந்தைப் பிள்ளை'' என்று கூறப்படுகிறது.

### தமிழ் மக்களின் விடுதலைக்கு

## அறப்போர், மறப்போர், அறிவுப்போர், மூன்றும் தேவை!

### நூல் வெளியீட்டு விழாவில் 'அமிர்'

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நடைபெற்று வரவேண்டும். ஒரு சமயத்தில் அறப்போர நடத்தவேண்டிய அவசியம் ஏற்படும். மற்றோர் நேரத்தில் மறப்போரில இறங்கவேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலை ஏற்படலாம். இனொரு சமயத்தில் இவையிரண்டையும் விடுத்து அறிவுப் போர் நடத்த வேண்டியிருக்கலாம் இன்று நடைபெற்றுவருவது அறிவுப் போராட்டமாகும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் காசி. ஆனந்தனின ''தமிழன் கனவு'' நூல் வெளியீட்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஈழத் தமிழினத்தின் இன உணர்ச்சிக் கவிஞன் என்று புகழ்பெற்ற இளங்கவிஞரான காசி. ஆனந்தனின் 'தமிழன் கனவு' நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 25-ந் திகதி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி அதிகாரியும் ஈழத்தின் பழம்பெரும் கவிஞர்களில் ஒருவருமான திரு. க. செ. நடராசா தலைமை வகித்தார்.

'தமிழன் கனவு' நூலை, ஜனாப் எம். கே. எம். அபூபக்கர், வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா, ஈழவேந்தன், இளஞ்செழியன், வித்துவான் பண்டிதர் வி.சி. கந்தையா ஆகியோர் அறிமுகம் செய்து விமர்சன உரைகள் வழங்கினர்.

இறுதியாகப் பேசிய திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

தமிழன் இன்று காணும் கனவு நனவாகவேண்டுமானால் தமிழ் பேசும் மக்கள்

## தமிழரசு வாலிப முன்னணி

தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்சபைக் கூட்டம், இன்று (30-8-68) யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கூடுகிறது.

இன்றுள்ள அரசியல் நிலை பற்றி பொதுச்சபை ஆராயும் என வாலிபர் முன்னணிச் செயலாளர் திரு. ந. அருணாசலம் தெரிவித்துள்ளார்.

வாழும் இடமெல்லாம் தமிழ் மொழி ஒரே சீராக பேசப்பட்டு வரவேண்டும். இலங்கையில் பேசும் தமிழும், தமிழகத்தில் பேசும் தமிழும், மலேசியத் தமிழும் ஒரே சீராக இருக்க வேண்டும்.

தமிழ்மொழியை சிதைய விட்டபடியால்தான் 800

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரம்

—அனந்ததேவன்.

கனகம்மானுக்கு வயது அறுபதைத் தாண்டி விட்டபோதிலும் கொழும்பு மாநகரை விட்டு ஊருக்கு வருவதற்கு அவருக்கு என்னவோ விருப்பமில்லை. கொழும்புத் தமிழனாக மாறிவிடவே அவர் விரும்பினர் என்றாலும் மிகையாகாது. சிலர் அப்படி அபிப்பிராயப் படுவதற்கு காரணமுமில்லாமலில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று 'பென்சனியர்' என்று தரம் உயர்ந்தபோது அவர் மற்றவர்களைப்போல் செத்து மடிவதற்காவது ஊரோடு வந்து சேருவார் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர்.

அரசாங்க உத்தியோகத்தின் அடித்தளத்தில் இருப்பவனும் உயர்பதவியில் இருப்பவனும் ஓய்வு பெற்றவுடன் 'பென்சனியர்' என்ற ஒரே நாமத்தில் சமரசம் காண்கின்றனர் என்பது என்னவோ மறைக்கவும் மறுக்கவும் முடியாத கசப்பான உண்மைதான்.

அப்படியொரு தர நிலைக்கு இறங்கி சொந்த ஊர் மக்களுடன் ஒன்றி வாழ விரும்பாத கனகம்மான் சில்லறைக் கம்பனியொன்றில் கேவலம் சில்லறை ஊழியராகத் திரும்பவும் உழைத்துக்கொண்டிருப்பது தெரிய வந்ததும் 'பணத்தாசை பிடித்த மனிதன் சாகுமட்டும் உழைக்கட்டும் நமக்கென்ன?' என்ற போக்கில் ஊரார் அவரை மறந்திருந்தனர்.

கனகம்மானைப் பணத்தாசை பிடித்தவரென்றும் ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. காரணம், ஊரிலே நல்ல வருமானத்தைத் தந்து கொண்டிருந்த இருபது பரப்பு நிலத்தை இருபதினாயிரம் ரூபாவிற்கு விற்று கொழும்புக்குச் சமீபத்தில் நாட்டுப் பக்கமாக ஒரு பரப்புக்கும் குறைவான ஒரு துண்டுக் காணியை இருபதினாயிரம் ரூபாவிற்கு வாங்கிய அவரது புத்திசாலித் தனத்தை அவரே மெச்சிக் கொள்வார்.

செங்கற்களினாலும் களி மண்ணினாலும் மூங்கில் தடிகளாலும ஒரு வீட்டைக் கட்டி எழுப்பி சுவர்களுக்குச் சாந்துபூசி வெள்ளையடித்து அசல் கல்வீடாக்கிய பின் அவரும் கொழும்பிலே வீடு வளவிருக்கும் ஒரு கொழுப்புத் தமிழனாக மாறி விட்டாரென்றே சொல்ல வேண்டும்.

ஆனால், திடுதிப்பென்று ஒரு நாள் குடும்பத்துடன ஊரில் தேடுவாரற்றநிலையில் கிடந்த வீட்டில் குடி புகுந்து எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடிப்பாரென்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. 1958 இனக் கலவரமொன்றுபோல் நடந்திருந்தாலும் மனம்போன போக்கில் பேசுவதற்கு ஒன்றுமே இருந்திரா திருக்கலாம். அப்படியெதுவுமே நடந்திராத படியினுல் போலும் பலரும் பலவிதமாகக் கதைத்துக் கொண்டனர்.

''கனகம்மானின் தலைச்சன் அவன்தான் தருமன் யாரோ சிங்களக் குட்டியுடன் சேஷ்டை விட்டதை அம்மான் கண்டுவிட்டாராம். எங்கே அவளின் பின்னுல் அவன் ஓடிவிடுவானே என்று பயந்தே ஓடிவந்திருக்கிருர்.''

''காலா காலத்தில் ஒரு கட்டையில் கட்டி வைக்காட்டால் காளைகள் கட்டாக் காலிகளாக மாறத் தானே செய்யும். குமருகளும் அப்படித் தான்.''

இப்படியெல்லாம் பேசிப் பொழுதைப் போக்கியவர்கள் அடுத்த வாரம் தருமனுக்குக் கலியாணத்திற்கு நாள் வைத்து விட்டார்களாம் என்பதை அறிய வந்ததும் அசந்து போயினர்.

கனகம்மான் வீட்டார் எல்லோரும் கொழும்பிலிருந்து ஊருககுவந்து ஒரு சில நாட்களே ஆகியிருந்தன. அம்மானின் நடுவிலான் நடராசாவைத் தவிர மற்றப் பிள்ளைகளையெல்லாம் அவர் தம்முடன் கூடவே அழைத்து வந்திருந்தார்.

நடுவிலானுக்கு லீவு கிடையாததால் அவன் சடங்கு வீட்டிலன்றே அல்லது அதற்கு முதல்நாளோதான் தன்னுல் வர முடியுமென்று கண்டிப்பாக அறிவித்திருந்தான்.

அம்மானுக்கு அதிகமில்லை ஆறுபிள்ளைகள்தான். அவர்களிலும் மூன்று பெண்களென்ருல் மிகுதி மூன்றும் ஆண்களாகத் தானிருக்க வேண்டுமென்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை,

செல்லமாக வளர்த்த பிள்ளைகளாகையால் யாரையும் அவரவர் பெயர் சொல்லி அழைப்பது அம்மானின் பழக்கமுமல்ல வழக்கமுமல்ல. மனைவியை 'நாகு' என்றுதான் ஆசையாக அழைப்பார். நாகம்மா என்று அழைப்பதற்கு அச்சம் போலும். அவரையும் அவரின் நாகுவையும் ஒரு கலக்குக் கலக்கி முதலாவது பேருக அவதரித்த தருமனைத் தலைச்சனென்றும், பின், முறையே நடுவிலானென்றும் கடைச்சனென்றும் அதே போன்று பெண்பாலில் பெண் பிள்ளைகளையும் அழைக்க அவர்தவறவில்லை.

மத்தியான நேரம். எல்லோரும் மதியபோசனத்தை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கின்றனர். அவ்வூர் கெளரவ தபால்சேவகர்களில் ஒருவர் கடிதமொன்றைக் கடைச்சனிடம் கொடுத்து விட்டுப் போகிருர். நடுவிலானிட மிருந்து வந்த கடிதமென்பது மேலுறையிலிருந்த கையெழுத்திலிருந்தே தெரிந்து விட்டதால் உணவருந்திய பின் ஆறுதலாகப் படிக்கலாம் என்ற நோக்கத்துடன் அதைக்கடைச்சனிடமிருந்து பெற்று மேசைமேல் வைத்து விட்டுஎல்லோருக்கும்உணவு பரிமாறினுள் நாகம்மா. அது ஒரு கலாட்டாக் கடிதம் என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே அதைப் பிரித்துப் பார்க்காமல் உணவை முடித்துக் கொண்டது புத்திசாலித்தனமாகி விட்டதென்பதைப் பின்னுல் தான் எல்லோரும் புரிந்து கொண்டனர். கைகளையும் வாய்களையும் ஈரமாக்கிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தனர்.

கவனமெல்லாம் சாப்பாட்டில் லயித்திருந்தபடியால் எல்லோரும் கடிதம் பற்றி மறந்தே போனுர்கள். சாப்பிடும் போது யாரும் வாய் திறந்து அனுவசியமாக அரட்டை அடிக்கக் கூடாது என்பது அம்மானின் கண்டிப்பான உத்தரவு. ஆகவே தான் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அந்த வீட்டில் ஆரவாரம் எதுவமின்றி அமைதி நிலவுகிறதென்ருல் அது சாப்பாட்டு நேரம் அல்லது எல்லோரும் நித்திரை என்று தான் அர்த்தம் கொள்ள வேண்டும். மதியபோசனம் அருந்தும் போது அம்மாவின் உடம்பெல்லாம் வியர்த்து ஈரமாகிவிடும். அதுவும் சற்றுக் காரமானுல் மூக்குத் துவாரங்களும் ஈரமாகிவிடும். அதன் பயனுகத் துவாயொன்றும் ஈரமாகி விடும்.

கனகம்மான் உணவருந்தியபின் வழக்கம் போல் ஒரு புளியேப்பம் விட்டவண்ணம் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டு அதிலே சரிந்து கொண்டார். இப்போது அவரது வலதுகரம் விசிறியொன்றை ஆட்டிக் கொண்டிருந்தது.

எல்லோருக்கும் உணவு பரிமாறிய பின் கடைசியாகத் தனது உணவை முடித்துக் கொண்ட நாகு வெற்றிலை யெடுத்து. வாயில் போட்டுக் குதப்பிய வண்ணம் கடிதத்தின் ஞாபகம் வரப்பெற்றவளாக வைத்த இடத்தில் தேடினுள், அது அங்கு இல்லை. கடிதத்தை யாராவது எடுத்தார்களா என்று எல்லோரையும் வினவியபின் எங்கே போயிருக்கும் என்ற விஞக்குறியுடன் ஏமாற்றத்துடனே திரும்பியவள் கடைச்சி கடிதத்தை எடுத்துச் சென்று ஒரு மூலையிலிருந்து உறையை ஈரமாக்கி உறையிலிருந்த முத்திரையை எடுப்பதற்கு எத்தனித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றவளாக எரிச்சலுடன் அதை அவளிடமிருந்து பறித்தாள்.

அதைத்தாங்கிக் கொள்ள முடியாத கடைச்சி ஒவென அழத் தொடங்கினுள். கடிதத்தைப் பிரித்து உறையை அவளிடம் கொடுத்து அவள் அழுகையை ஆற்றியபின் தலைச்சனிடம்உரத்துப் படிக்குமாறு கடிதத்தைக் கொடுத்தாள்.

கடிதம் நடுவிலானிடமிருந்து வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட பாட்டி பார்வதி நாகுவின் தாயார்-தன் வெற்றிலை உரலுடன் சமீபமாக வந்து தரையில் ஒய்யாரமாக கால்களை நீட்டியவண்ணம் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டாள். நிலம் ஈரமாக இருந்ததையும் அவள் பொருட்படுத்தவில்லை.

கடிதத்தை மற்றவர்கட்கும் கேட்கும்வண்ணம் உரத்துப் படிப்பதாகக் கூறி நான் நீ எனப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்த எல்லோரையும் அமைதியாக உட்கார்ந்து படிப்பதைக் கேட்குமாறு கட்டளையிட்டாள் நாகு. தாயாரின் உத்தரவைத் தொடர்ந்து எல்லோரும் உட்கார்ந்து கொண்டனர். தலைச்சன் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினுன்.

''அன்புள்ள அப்பா, அம்மா, [illegible] தங்கைகள் அனைவருக்கும் அறியத் தருவது யாதெனில் இவடம் சுகம். உவடம் சுகத்திற்கும் பதில் போடவும். பதில் போடவும் என்ருல் உடனே போடவும் காத்திருக்கிறேன் என்று அர்த்தம். மேலும், நேற்றிரவு திடீரென்று ஒரு சில திருடர் எங்கள் வீட்டினுள் நுழைந்து எல்லாவற்றையும் திருடி விட்டார்கள். கதிரைகள் மேசைகள் உட்பட எல்லாம் அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கவேண்டும். திருடர்கள் லொறி ஒன்றில் வந்ததாக ஞாபகம். என்னைத் தூக்கிக் கீழே கிடத்திவிட்டு எனது புத்தம்புதிய பொக்ஸ் ஷ்பிரிங் கட்டிலையும் காவினுர்கள். கட்டிலை களவாடிய கள்வர்கள் மற்றச் சாமான்களை சும்மா விட்டு வைப்பார்களா?......''

தலைச்சன் முகத்தில் ஊற்ருகத் தோன்றிய வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

''அட தூங்கு மூஞ்சிப் பயலே அதுமட்டும் என்னடா செய்தாய்?'' ஆவேசம் வந்தவராகக் கத்தினுர் கனகம்மான். இப்போதும் அவர் உடம்பெல்லாம் ஈரமாகியது.

''கண்களை இருட்டிக்கொண்டு வகுகுது-எனக்கு என்னவோ செய்யுமாப்போல் இருக்கிறதுமேனை...'' என்று கூறிய நாகு மயக்கம் வரப்பெற்றவளாக நிலத்தில் சரிந்தாள்.

கண்கள் ஈரமாக கணப்பொழுதில் கவலையே உருவாக மாறிய பாட்டி பார்வதி பரிவோடு தன் மகளுக்கு விசிறியவண்ணம் ''சிறிது தண்ணீர் கொண்டு வாருங்கள்'' என்று கத்தினுள். முகம் ஈரமானுல் மயக்கம் தெளியும் என்பது அவள் எண்ணம்.

தாயாருக்கு என்னவோ ஏதோவென்று பயந்த பிள்ளைகள் 'அம்மா, அம்மா' என்று ஓலமிட்டு ஆரவாரம் செய்ய அது அயல் வீட்டிலுள்ளோர்களுக்குக் கேட்க அவர்களும் விஷயமறிய ஓடோடி அங்கே வந்துசேர்ந்தனர். முருக்கங்காய், அவரைக்காய், பிடலங்காய், பயிற்றங்காய் ஆகியோரும் தத்தம் குடும்ப பரிவாரங்களுடன் அங்கு வந்துசேரவே பெரிய கூட்டமே சேர்ந்துவிடுகிறது.

—அடுத்த வாரம் முடியும்

## கொக்குவில் கிராமசபையின் கோரிக்கை

கோண்டாவில் கொக்குவில் கிராமசபைத் தலைவர் சி. க. சபாபதி அவர்களின் வேண்டுகோலின்படி இம்மாதம் 21-ம் திகதி உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் கொக்குவில் கிராமசபைக்கு விஜயம் செய்தார். அவருடன் உள்ளூராட்சி உதவியாணையாளர் திரு. முருகவேல் அவர்களும் வந்தார். அவர்களை கொக்குவில் கோண்டாவில் கிராமசபைத் தலைவரும் மற்றும் அங்கத்தவர்களும் பொதுமக்களும் கிராமச்சபையின் வாயிலில் வைத்து வரவேற்றனர்.

என்றும் இல்லாவகையில் கிராமசபையின் வாயிலில் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி கம்பீரமாக பறந்துகொண்டிருந்தது.

தலைவரால் பின்வரும் கோரிக்கைகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

(1) கிராமச்சபை எல்லைக்குள் பொதுச்சந்தை அமைப்பதற்கும் காணி கொள்வனவு செய்வதற்கும் ரூபா 75000.00 கடனுக வழங்க வேண்டும்.

(2) கோண்டாவில்கிழக்கு சந்திக்கருகாமையில் ஓர் வண்டிக்காலை நிறுவுவதற்கு தேவையான காணி கொள்வனவு செய்வதற்கு ரூபா 5000 நன்கொடையாக பெற்றுத்தரவேண்டும்.

தல அபிவிருத்தி நிதியில் கடனுக ஒரு லட்சம் பெறவும் பாக்கியை தவணையில் செலுத்தவும் சிபார்சு செய்யும்படியும் கொக்குவில் கிழக்கு கோண்டாவில் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு இரு மின்சார உப நிலையங்களை நிறுவ அதற்குரிய இலாகாக்களை தூண்டி ஆவனசெய்யுமாறும கிராமச்சபை உறுப்பினர்களின் சார்பில் ஒரு மகஜரை அமைச்சரிடம் தலைவர் கையளித்தார்.

## நகைச்சுவைச் சித்திரம்

## நற்சுடரான தீபம்

—''கல்லூரன்''—

கொள்கையின் குரலாய் இந்தக்
குவலய மீதெழுந்து,
வெல்வதே கருமம் என்ற
வீறுசால் விழைவு கொண்டு
நல்வழி சென்று எங்கள்
நற்றமிழ் பண்பு கொண்டு
புல்லியர் கீழ்மை கொல்ல
புலியெனப் பாய்ந்து தம்மின்
நல்லுயிர் ஈந்து நெஞ்சில்
நற்சுடரான தூய
செல்வமாம்! தியாகியான
திருமலை ஈன்ற செம்மல்!
பல்புகழ் இயல்பு விஞ்சும்
பண்டமிழ் பாவை கண்ணீர்
மல்கினுள் வரோதயத்தின்
மறைவினைக் கண்டு நொந்தாள்!
உள்ளெலாம் உவந்து தூய
ஒளிவடி வான அன்னுன்
நல்லுயிர் வாழ நெஞ்சில்
நாமத்தைப் பேணி வைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொ. கலைச்செல்வி,
ஏழாலைமேற்கு.

கே: தமிழர்கள் மனதில் ஆசையைவளர்த்து மோசம் செய்து விட்ட பிரதமருடன் தமிழரசுக் கட்சி இன்னும் உறவு வைத்திருப்பதேன்?

ப: தமிழினத்தின் நன்மைக்காகத்தான்!

ஃ

'மொழிவாணன்'
இரத்தினபுரி.

கே: ஒரு பாராளுமன்றத்தில் உபசபாநாயகர் பதவி வகிப்பவர் தனது கட்சிக்காகப்பிரசாரம் செய்வது சரியான அரசியல் முறையா?

ப: முறையற்றது தான். அதை அப்பதவி வகிப்பவர் அல்லவா உணர்ந்து நடக்க வேண்டும்?

கே: ஒரு 'துரும்பால்' இகழப்படக்கூடியவர் எப்படியானவராய் இருப்பார்?

ப: பொன்னம்பலத்தைப் போல இருப்பார்!

ஃ

தா. முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: இப்பொழுதெல்லாம் கணவனமார்கள் மனைவிமார்களுக்கு அடிமைகளாக இருப்பதனால், மனைவி கழுத்தில் கட்டும தாலியை கணவன் கழுத்திலே கட்டிவிட்டால் என்ன?

ப: தாலி கட்டுவதன் கருத்து பெண்ணை அடிமையாக்குவது என்று எடுத்துக் கொண்டால் — உங்கள் கருத்து சரிதான்!

ஃ

பா. இருதயமனோகரன்,
சக்கோட்டை.

கே: மன்னார் எம். பி. திரு. அழகக்கோனைப்பற்றி ஒரு செய்தியும் பத்திரிகைகளில வருவதில்லையே?

ப: திரு. அழகக்கோன், சலசலப்பின்றி அமைதியாக பணிபுரிபவர். பத்திரிகை நிருபர்களை அழைத்து தமது சேவைகளைப் பற்றி தமிழ் காங்கிரஸ் எம். பீக்களைப போல புழுகித் தள்ளுவதில் அவருக்கு நம்பிக்கை கிடையாது.

கே: தனித் தமிழ் நாடு கேட்பது பற்றி தங்கள் அபிப்பிராயம் யாது?

ப: தனித்தமிழ்நாடு கேட்பதற்கு முன் - நம்முடைய மக்கள் அதற்கு பக்குவப் பட்டுவிட்டார்களா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் பக்குவப்படவில்லையென்பதே எனது கருத்து.

ஃ

'சிறைப்பிரியன்',
கல்லோடை.

கே: நான் இம்முறை ஜீ. சீ. ஈ. சோதனை எடுக்கவிருக்கிறேன். எவ்வளவு முயன்றும் மனம் நம்பிக்கை வைத்துப் படிக்க முயல்வில்லையே. இதற்கு என்ன செய்வது?

ப: நம்பிக்கை இல்லாவிட்டால் உலகில் வாழ்க்கையே கிடையாது. எனவே நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள முதலில் முயலுங்கள்!

ஃ

செ. பெ. கிருஷ்ணன்,
இரம்புக்கந்தை.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமா?

ப: சிறுபான்மை மக்களின் ஆதரவை இழக்காமலிருந்தால் வெற்றி பெறும்.

ஃ

தமிழன்,
வெள்ளவத்தை.

கே; சென்ற வாரம் வெளிவந்த ''அன்புள்ள ஜீ. ஜீ. யிற்கு'' என்ற கட்டுரையை எழுதிய எஸ்ஸாரெம் என்பவருக்கு எனது பாராட்டு. பொன்னர் இதை வாசித்திருந்தால் என்ன செய்திருப்பார்?

ப: உள்ளதைத்தானே எழுதியிருக்கிறார்; எதுவும் செய்ய முடியவில்லையே என்று ஆத்திரப்பட்டிருப்பார்!

ஃ

பி. யோகானந்த்,
உடுப்பிட்டி.

கே: ஜீ. ஜீ. அடுத்த வட்ட மேசை மகாநாட்டுக்கு ஆயத்தம் செய்கிறார் போல் தெரிகிறதே!

ப: ஆமாம். தேர்தல் நெருங்குகிறதல்லவா?

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவுடன் அடுத்த பொதுத் தேர்தலில் அடங்காத் தமிழன் சுந்தர் மோதப் போகின்றாராமே? இது உண்மைதானா?

ப: உண்மையோ பொய்யோ மோதினால், மூக்குடைவது மட்டும் நிச்சயம்!

கே: மட்டுநகர் முதல்வர் இராஜதுரையை மக்கள் எதற்காக வெறுத்தார்கள்?

ப: நீங்கள் ஏதாவது கனவு கண்டீர்களா?

ஃ

எம். டபிள்யூ. ரூசாய்ரோ,
மட்டுநகர்.

கே: நான் ஒரு நாள் கடற்கரையில், எனது சக வகுப்பு மாணவியுடன் ஒரு மாணவன் சல்லாபமாக இருந்ததை கண்டேன். அன்று முதல் அம் மாணவி என்னுடன் முன்னையவிட மிகவும் அன்பாக நடந்து வருகிறாள். இதன் காரணம் என்ன?

ப: கண்டதை வேறுயாரிடமாவது விண்டுவிடப் போகிறீரோ என்ற அச்சம் தான்!

ஃ

ஐ. சிவநாதன்,
நெல்லியடி.

கே: சினிவில் மா. ஓ. வின் மகிமை இன்னும் குறையவில்லையாமே! உண்மையா?

ப: சீனாவில் அவரது மகிமையை யாராவது குறைத்தால் ''தலை'' போய்விடுமே!

கே: தீண்டாமைக் கெதிராக தமிழரசுக்கட்சியும் போராட்டங்களை நடத்தினால் என்ன?

ப: நடத்திக் கொண்டு தானே வருகிறது?

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: உங்களிடம் கேள்வி கேட்டால் விடைவர இரு வாரம் செல்கிறதே ஏன்?

ப: அந்த அளவிலாவது நீங்கள் அதிர்ஷ்டசாலியென்று எண்ணிக் கொள்ளுங்கள்.

ஃ

ஏ. கந்தையா,
யாழ்ப்பாணம்.

கே: மாவட்டசபை இல்லாமற் போயும் கூட தமிழரசார் இன்னும் அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதேன் என்கிறாரே உடுப்பிட்டி சிவா!

ப: சம அந்தஸ்து இல்லையென்று பிரதமர் ஆரம்பத்திலேயே கையை விரித்து விட்டாரே, தமிழ் காங்கிரஸ்காரர்கள் ஏன் அரசாங்கத்தைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்களாம்?

கே: தமிழரசார் தேர்தல் வாக்குறுதியொன்றையும் நிறைவேற்றவில்லையென்கிறாரே பொன்னர்?

ப: தமிழரசார் இருக்கட்டும், மூன்று மாதத்துக் கிடையில் உரிமைகளைப் பெற்றுத்தராவிட்டால் எம், பீ. பதவியை விட்டு விலகி விடுவோம் என்று தேர்தல் சமயத்தில் வடபகுதிமேடைகளிலே முழங்கினாரே பொன்னர்? உரிமைகளைப் பெற்று விட்டாரா? பெறாவிட்டால ஏன் கொடுத்த வாக்குப்படி பதவிகளை உதறியெறியவில்லை? 3 மாதங்களென்ன 3 வருடங்களுக்கு மேல் முடிந்து விட்டதே!

ஃ

எம். சுப்பையா,
தலவாக்கொல்லை.

கே: செக்நாட்டில் ரஷியர்களின் படையெடுப்புப பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: கம்யூனிஸ்ட் பேய்க்கு வாழ்க்கைப்பட ஆசைப்படுவோருக்கு இது ஒரு நல்ல பாடமாக அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

ஃ

ஏ. அபூபக்கர்,
கல்முனை.

கே; முஸ்லிம்கலாசாரபல்கலைக் கழகத்தைத் தமிழரசுக்கட்சி எதிர்த்ததேன்?

ப: முஸ்லிம் கலாசார பல்கலை கழகத்தைத் தமிழரசுக்கட்சி ஆதரிக்கவில்லையே தவிர எதிாக்கவில்லை. இதற்கு காரணம், கலாசார அடிப்படையில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவது என்ற கோள்கையை தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொள்ளாதது தான். இந்து கலாசார பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் கூட கட்சி இந்தக் கொள்கையைத் தான் கடைப்பிடித்து வருகிறது. பூரணத்துவமுள்ள சகல கலைகளும் கற்கக்கூடிய ஓர் பல்கலைக் கழகம் தமிழ்பேசும் மக்களுக்குப் பொதுவாக ஏற்பட வேண்டுமென்பதே கட்சியின் நோக்கமாகும்.

ஃ

வ. ராமனுதன்,
கிளிநொச்சி.

கே; எங்கள் தொகுதியில் நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்ட மேடையில் நின்று ''தமிழரசுக்கட்சிக்காரர்கள் மேல் இலஞ்சக் குற்றச்சாட்டு உண்டாம். பொறியில் அகப்பட்ட எலிகள் போல இருக்கிறார்கள் தமிழரசு எம். பீ.க்கள் சிலர்'' என்று முழங்கிய வவுனியா எம். பீ. பாராளுமன்றத்தில் அதை மறுத்ததேன்?

ப: திரு. அமிர்தலிங்கம் விடுத்த சவாலினால் வேர்த்து விறு விறுத்துப் போய்விட்டார் வவுனியா எம். பி. கெட்டிக்காரன் புழுகுகூடஎட்டு நாளைக்குத் தானே? அப்படி இருக்கும்போது வவுனியா எம். பீ.யின் புழுகு எத்தனை நாளைக்கு? தாம் சொன்னதை ஏற்றுக் கொள்ள அஞ்சுபவர்கள் எதற்காக இத்தகைய பொய்களைக்கூற வேண்டும்?

ஃ

திருமாவளவன்,
யாழ்ப்பாணம்.

கே: தமது இந்துப் பல்கலைக் கழகத்துக்காக ரூபா பத்து அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தமிழரசாரின் எதிர்ப்பினாலேயே அதை நிறுவ முடியவில்லை என்றும் கூறுகிறாரே ஜி. ஜீ.?

ப: முழுக்க முழுக்க 'டூப்' அடிக்கிறார் திரு. பொன்னம்பலம். அவர் கோரும் இந்து பல்கலைக் கழகத்துக்கு ஒரு சதம்கூட ஒதுக்கப்படவில்லை வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 10-00 அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டிருப்பது இராமநாதன் பல்கலைக் கழகததுக்கேயன்றி ஜீ. ஜீ. யின் இந்து கலாசார பல்கலைக் கழகத்துக்கு அல்ல. இந்து பல்கலைக்கழகம் பற்றி திரு. பொன்னம்பலம் கதைக்கத் தொடங்குமுன்பு சிறிமா ஆட்சியின் காலத்திலிருந்தே இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கு இந்த அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டு வருகிறதே!

ஜெ. மகாதேவன்,
மட்டக்களப்பு.

கே: கிழக்கு மாகாணத்துக்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் வரப்போகிறாராமே!

ப: நன்றாகவரட்டும். ஒரு மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டு பெரிய சேனநாயக்காவின் கால் பிடித்து கிடந்த போது கல்லோயாவும், கந்தளாயும், அல்லையும் ஆயிரக்கணக்கான சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டுப் போனதையும், 'அம்பாறை' என்ற சிங்களத் தொகுதியொன்று கிழக்குமாகாணத்தின் கீழ்க் கோடியில் உருவாகுவதற்குத் தாமே காரணமாக இருந்தோமே என்பதையும் நினைத்து நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கட்டும் — மனச்சாட்சியிருந்தால்!

ஃ

ச. திருச்செல்வம்,
தெரணியகலை.

கே: 'தேரின் மேல் இருக்கும் ஈ தன்னால் எவ்வளவு புழுதி கிளம்புகின்றது என நினைக்கின்றது.' இதே போன்ற எண்ணமுடையவரே திருவாளர் பொன்னம்பலமும்என நான் கூறுகின்றேன் தங்கள் கருத்து யாது?

ப: உங்கள் கருத்தை நான் மறுக்கப் போவதில்லை.

கே: வருகின்ற தேர்தலில் சுதந்திரக்கட்சி பதவிக்குவந்தால் தமிழர் நிலை எப்படி இருக்கும்?

ப; மீண்டும் போராட்டத்தில் இறங்க நேரிடலாம்!

கே: இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகளுள் நிலையான கொள்கையுடையது எது?

ப: எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும் சமஷ்டிக் கொள்கையைக் கைவிடாத தமிழரசுக் கட்சி தான்!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல்,

கே: மனிதன் வாழ்க்கையை வெறுப்பது எப்போது?

ப: பிரேதத்தை எரித்து விட்டு சுடலையிலிருந்து வீடு திரும்பும்போது!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12





பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு.
கொழும்பு-11

தொலைபேசி
3597—6522

தந்தி: தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# மிருகத்தனம்!

'வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெரு வழக்கிற்கு இழுக்குமுண்டோ' என்று பாடினன் ஓர் தமிழ்ப் புலவன். அந்தக் கூற்றை நிதர்சனமாக்கிக் காட்டிவிட்டது செக்கோஸ்லவேக்கியா மீது ரஷியாவும் ஏனைய வார்சோ ஒப்பந்த நாடுகளும் நடத்திய ஆக்கிரமிப்பு.

எந்த ஒரு நாட்டுக்கும், அல்லது இனத்துக்கும் தனது சுயநிர்ணய உரிமையை தானே வகுத்துக்கொள்ளும் மறுக்கமுடியாத உரிமை உண்டென்றும், ஒரு நாட்டின் ஆதிபத்திய உரிமை மீது மற்ருெரு நாடு கைவைப்பது ஐ. நா. சாசனத்துக்கும் மனித நீதிக்கும் முரண்பட்டதென்றும், அழகு படச்சுவை சொட்ட பல உலக அரசியற் தலைவர்களும், இராசதந்திரிகளும் எடுத்துக்கூறி வருகிறார்கள்.

ஆனல் இப்பேச்சுக்களால் என்ன பயன்? செக்கோஸ்லவேக்கிய மக்களின் உரிமைக் குரலை—அவர்களின் தொண்டைக் குழியைப் பிடித்து தனது இராணுவ பலத்தைக் கொண்டு சோசலிசத்தின் பெயரால் நசுக்கிவிட்டதே ரஷியா!

செச்கோஸ்லவேக்கிய தலைவர்களுடன் தாமே செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி, இராணுவ பலத்தைக் கொண்டு செக் மக்களின் சுதந்திர வேட்கையை காலில் போட்டு நசுக்க முற்பட்டுள்ள ரஷியாவின் கொடூரத்தை-கொடுமையை, அடக்குமுறை என்பதா? மிருகத்தனம் என்பதா, ஆக்கிரமிப்பு என்பதா, அரக்கத்தனம் என்பதா எந்த வார்த்தையைக் கொண்டு அழைப்பது என்று நமக்கு விளங்கவில்லை.

**நண்பர்களாக நடித்துக்கொண்டே முதுகில் குத்தும் கயமைத்தனம் கம்யூனிஸ்டுகளுக்கு கூடப்பிறந்த குணமாகும். அந்தக் கயமைத்தனத்தை அச்சொட்டாகப் பின்பற்றி செக் மக்களின் முதுகில் ஆழமாகக் குத்திவிட்டது சோவியத் யூனியன்.**

சோசலிசத்தை செக் நாட்டில் பாதுகாப்பதற்குத்தான் அங்கு போனதாக ரஷியா கூறிக்கொள்வதைக் கேட்டு ஏமாற உலக மக்கள் முட்டாள்களல்லர்.

சோசலிசமோ, கம்யூனிசமோ, முதலாளித்துவமோ, வேறு எந்த 'இசமோ' எது தங்களுக்கு தேவையென்பதை முடிவு செய்ய வேண்டியவர்கள் செக் நாட்டு மக்களே. சோசலிசத்தையே நீங்கள் பின்பற்ற வேண்டுமென சோவியத் யூனியனே, முதலாளித்துவத்தையே நீங்கள் பின்பற்றவேண்டுமென அமெரிக்காவோ எந்த ஒரு நாட்டு மக்களிடமும் தமது கொள்கைகளை வலிந்து திணித்துவிட முடியாது.

**தனி மனித சுதந்திரத்தையும் பத்திரிகை சுதந்திரத்தையும் பறிமுதல் செய்து தனிநபர் வணக்கத்துக்கு வழிவகுக்கும் ஸ்டாலினிச சித்தாந்தத்தின் கொடும் பிடியிலிருந்து விடுதலையடைந்துவிட வேண்டுமென செக் மக்கள் உண்மையிலேயே உறுதிகொண்டுவிட்டார்களாயின், சோவியத் யூனியனின் டாங்கிகளாலும், பட்டாளத்தினாலும் அந்த சிந்தனை வளர்வதை தடுத்து நிறுத்திவிட முடியாது.**

செக் நாட்டுக்குள் நுழைந்துவிட்ட சோவியத் டாங்கிகளையும், இராணுவ ஜீப்புகளையும் நிராயுதபாணிகளாகவே செக் நாட்டு இளைஞர்கள் வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்வதாக வரும் செய்திகள் இதையே ஊர்ஜிதம் செய்வதாயிருக்கின்றன.

சனநாயகத்திலும் சுதந்திரத்திலும் ஆர்வமுள்ள உலக நாடுகள் பலவும் ரஷியாவின் மிருகத்தனமான நடவடிக்கையை மிக வன்மையாக கண்டித்துள்ளன. உலக மக்களின் அபிப்பிராயம் சோவியத் யூனியனுக்கு எதிராக திரும்பியுள்ளது.

சோவியத் யூனியன், செக் நாட்டில் நடத்தியுள்ள ஆக்கிரமிப்பு மூலம், உலக மக்களிடையே கம்யூனிஸ தத்துவத்திற்கு இதுகாலவரை இருந்து வந்த ஆதரவையும்கூட இழக்கச் செய்யும் ஒரு சூழ்நிலையை தோற்றுவித்துவிட்டது. சோசலிசத்தைக் காப்பாற்றுவதாக கூறி ரஷியா எடுத்த நடவடிக்கை சோசலிசத்தின் பேரில் செக் மக்களை மட்டுமின்றி உலக மக்களையே வெறுப்படைய வைத்துவிட்டது.

தப்பித் தவறி எப்போதாவது ரஷிய சார்பு நாடாக இலங்கையும் மாறும் சூழ்நிலை தோன்றினல் இன்று செக் நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ள இதே நிலைதான் நமது நாட்டுக்கும் ஏற்படும் என்பதை இலங்கை மக்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

இதே வேளையில், ஐ. நா. சபையின் ''கையாலாகாத்தனம்'' இப்போது மீண்டுமொருமுறை சந்திக்கு வந்துள்ளது. ரஷியாவைக் கண்டிக்கும் சாதாரண தீர்மானத்தைக்கூட நிறைவேற்ற விடாது தனது ''வீட்டோ'' அதிகாரத்தை பாவித்து விட்டது ரஷியா.

ஒவ்வொரு நாடுகளினதும் — அவை சிறிதாயினும் சரி, பெரிதாயினும் சரி—ஆதிபத்தியத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்றும் இலட்சியத்தையே ஐ. நா. சபை கொண்டிருந்தபோதிலும், அதனல் என்ன பிரயோசனம்? சின்னஞ்சிறிய செக் நாட்டில் பென்னம்பெரிய ரஷியாவும் அதன் சார்பு நாடுகளும் நடத்தும் பட்டப்பகற் கொள்ளையை தடுத்துநிறுத்த ஐ. நா.வால் முடியவில்லையே! ஐ. நா. சபை சக்தியற்ற வெறும் 'பொம்மை' சபையாகவே இருக்கவேண்டியதுதானு?

யார் உதவினலும், உதவாவிட்டாலும் தமது நாட்டின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் காப்பாற்றுவதற்கு உறுதியுடன் ரஷியப் படைகளுடன் போராடிவரும் செக் நாட்டு மக்களுக்கு இலங்கை மக்கள் சார்பில்—குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் சார்பில் நமது ஆதரவையும், வீர வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

**ஆக்கிரமிப்பு எங்கு எப்படி எந்த முறையில் எந்த அளவில் நடந்தாலும், நாம் அதைக் கண்டிக்காமலிருக்கமுடியாது. தமிழ் பேசும் பிரதேசத்தை குடியேற்றத் திட்டங்கள் என்ற போர்வையின்கீழ் சிங்கள ஆட்சி "ஆக்கிரமிப்பு" நடத்துவதை எதிர்த்து வன்மையாக போராடி வரும் நாம், செக் நாட்டின் மீது ரஷியா நடத்தியுள்ள மிருகத்தனமான ஆக்கிர்மிப்பை பலமாக கண்டிக்கிறேம்.**

ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் நீடித்து நிலைத்து நின்றதில்லையென்ற வரலாறு காட்டும் உண்மையையும் [illegible] நினைவூட்ட விரும்புகிறேம்.

இன்றைய அரசியல் நிலை —1

# தமிழரசுத்தலைவர்கள் இலட்சியவாதிகள் தான்; ஆனல் ஏமாளிகளல்லர்!

## இலஞ்சக் குற்றமும் தமிழ் காங்கிரசும்!

மாவட்ட சபைகள் நிறுவுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க ஐ. தே. கட்சிக்கு உதவி புரிந்த தமிழரசுக் கட்சி, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் தேசிய அரசாங்கத்தின் பிரதமர் வெற்றிபெருத சூழ்நிலையிலும், ஏன் இன்னும் அரசாங்கத்துடன் 'ஒட்டிக்' கொண்டிருக்க வேண்டும் என்று சிலர் கேட்டுவருகிருர்கள்.

இப்படிக் கேட்டு வருபவர்களிலும் இருசாரார் இருக்கின்றனர். சிலர் விஷமத்தனத்துடனும், சிலர் விளங்காத தன்மையிலும் இப்படி கேட்கின்றனர்.

இந்நாட்டில், தமிழரசுக் கட்சியின் கடந்த கால வரலாற்றையும், அரசியல் நேர்மையையும் தொடர்ச்சியாக அவதானித்து வந்த ஏனைய அரசியற் கட்சிகளுக்கும், மக்களுக்கும் தமிழரசுக் கட்சியின் இன்றைய போக்கு ஆச்சரியத்தை கொடுக்கலாம்.

### ஒரு உண்மை

இந்நாட்டிலுள்ள எல்லா அரசியற் கட்சிகளுக்குள்ளும் ஒரு கொள்கைக்காக—இலட்சியத்துக்காக விசுவாசத்துடன்—அந்தரங்க சுத்தியுடன்—பாடுபட்டு வரும் கட்சி தமிழரசுக்கட்சி மட்டும்தான் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள்.

ஏனைய அரசியற் தலைவர்களும், கட்சிகளும் கூட இந்த உண்மையை அரசியல் காழ்ப்பு காரணமாக வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் மானசீகமாக ஒப்புக்கொள்ளவே செய்வர்.

இதனல்தான் மாவட்ட சபை கிடையாது என்ற உண்மை தெரிந்த பின்பும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தாம் எதிர்பார்த்தது நடக்கவில்லையே என்று கூட்டுக் கட்சிகள் மூன்றும் குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுகின்றன.

திருமதி பண்டாரநாயகாவுக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாது என்று பாராளுமன்றத்தில் ஒரு முறை கூறிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று திருமதி பண்டாரநாயக்காவே கதியென்று அவரது காலடியில் விழுந்துவிட்டார். சம அந்தஸ்து பேசிய டாக்டர் என். எம். தனிச் சிங்கள வீரர் ஆகிவிட்டார். மதத்தை அபின்

**"எவ்ஸாரேய்"**

என்று வர்ணித்த டாக்டர் விக்கிரமசிங்க, புத்தபிரானின் பொன்னடிகளில் மலர் தூவும் 'பக்தராகி'விட்டார்.

### இலட்சிய பாசறை

இப்படி இவர்கள் எல்லாம் கொள்கை மாறி குணம் மாறி, கோலம் மாறிய போது கூட ஆச்சரியப்படாத மக்கள் தமிழரசுக் கட்சியின் இன்றைய போக்குப் பற்றி அதிசயிக்கிருர்கள் என்ருல், தமிழரசுக் கட்சி, விலைக்கு வாங்கப்பட முடியாத இலட்சிய வாதிகளைக் கொண்ட ஓர் கட்சி; தனது கொள்கையை உயிரென மதிக்கும் கட்சி; என்ற உயரிய இடத்தை தமிழரசுக் கட்சிக்கு மக்கள் தமது நெஞ்சிலே அளித்திருப்பதுதான்.

ஆம், உண்மைதான். தமிழரசுக்கட்சியின் கடந்தகால வரலாறு - புடம் போட்டெடுக்கப்பட்ட தியாக வரலாறுதான். 1956 முதல் 1965வரை சகிக்க முடியாத அளவுக்குப் பல இன்னல்களையும் தொல்லைகளையும் ஏற்றபோது கூட அரசியல் நாணயத்தை நேர்மையைக் கடைப் பிடித்து வந்த கட்சி தமிழரசுக் கட்சிதான்.

1960-ம் ஆண்டு மார்ச் தேர்தல் முடிந்த பின்பு மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த திரு. டட்லி சேனநாயகா தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை நிராகரித்துவிட்டு - மந்திரிப் பதவிகளைக் காட்டியபோது - அதைக் கண்டு ஆசாபாசத்தில் வீழ்ந்தவர்களல்லர் தமிழரசார். மாருக அந்த ஆட்சியையே ஒழித்துக் கட்டினர்கள்.

1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது கூட, திரு. டட்லி வழங்க முன்வந்த மூன்று மந்திரிப் பதவிகளையும் தமிழரசுக்கட்சி நிராகரித்து விட்டது - ஆக மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் மட்டுமே மந்திரிப் பதவி ஏற்ருர்.

இவற்றையெல்லாம் மிக நுண்ணியமாகக் கவனித்து வந்த இந்நாட்டுமக்களுக்கும், அரசியற் கட்சிகளுக்கும், மாவட்டசபை இல்லையென்று பிரதமர் கூறிய பின்பும் தமிழரசுக்கட்சி வெளியேருதது ஆச்சரியத்தை அளித்துள்ளபோதிலும் நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை;

**தமிழரசுக்கட்சி ஒரு கொள்கைக்காக போராடும் கட்சிதான். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனல் தமிழரசுக் கட்சியில் உள்ளவர்கள் இராசதந்திரமும் அரசியல் நுணுக்கமும் புத்திக் கூர்மையும் இல்லாதவர்களுமல்லர்; ஏமாளிகளுமல்லர்.**

மாவட்டசபை இல்லையென்ற பின்பும் தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்தில் இருக்கிருர்கள் என்ருல், அது கூட்டுக் கட்சிகளின் திட்டத்தை பொடிப்பொடியாக்கும் ஒரே காரணத்துக்காகத்தான். சுதந்திரக்கட்சியும், சமசமசஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து விரித்த வலையில் விழ தமிழரசுக் கட்சி மறுத்து விட்டது. அதாவது, கூட்டுக்கட்சிகளின் தலைவர்களின் இராசதந்திரத்தை தமிழரசுத் தலைவர்களின் இராசதந்திரம்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றத்தின் ஆபத்துப்பற்றி அன்றே எச்சரித்தார் செல்வா

தமிழ் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க ஆதரவுடன் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றம் மிகத் தீவிரமாக நடத்தப்பட்டது 1947ம் ஆண்டுக்கும் 1955ம் ஆண்டுக்மிடைப்பட்ட காலத்தில் ஆகும். இக்காலத்தில் தான் குறிப்பாக கிழக்கு மாகாணத்தி லுள்ள கல்லோயாஅல்லை, கந்தளாய் போன்ற குடியோற்றத் திட்டங்கள் திறக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள்.

அரசாங்க ஆதரவுடனை இச்சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் பதவியில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருந்து, சிங்களக்குடியேற்றத்துக்கு ஆமாம் சாமி போட்டவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

ஆனல் அன்றுதொட்டே சிங்களக் குடியேற்றத்திட்டங்களின் மூலாதார நோக்கம் தமிழ் பிரதேசத்திலேயே தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையராக்கி அவர்களை ஒழித்துக் கட்டுவதே என்பதை புரிந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி, சிங்களக் குடியேற்றத்தை பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் மிகத் தீவிரமாக எதிர்த்து வந்தது; குடியேற்றத்திட்டங்களில் தமிழ் மக்கள் திரளாகச் சென்று குடியேறி தமிழ்ப் பகுதியைகாப்பாற்ற முன்வரவேண்டும் என்று நாளிலும் பொழுதிலும் பிரசாரம் நடத்தி வந்தது, இன்னும் நடத்தி வருகிறது.

திரு. பொன்னம்பலமோ, சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடைபெற்ற வேளையில் பதவியைக் கெட்டியாக பிடித்துக் கொண்டு தூங்குவது போல பாசாங்கு செய்து கொண்டிருந்தார். இன்று தான் 20 வருடங்கள் கழித்து— சிங்களக் குடியேற்றம் நடைபெற அனுமதித்த·ல், தமிழ்ப்பிரதேசம் அழிந்துவிடும் என்று அண்மையில் முதன் முதலாக கைதடியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியிருக்கிறர் திரு. பொன்னம்பலம்.

இதிலிருந்தே திரு. பொன்னம்பலத்தின் தூரதிருஷ்டியற்ற தன்மையையும், திரு. செல்வநாயகத்தின் மதிநுட்பம் வாய்ந்த திறமையையும் அளவிடலாம்.

தமிழரசுக் கட்சிக்காரர் எங்கே சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்தார்கள் என்று ஒருவேளை திரு. பொன்னம்பலமும் அவரது கையாட்களும் கேட்கலாம். இதோ ஆதார பூர்வமாக தருகிறேம். 1951-ம் ஆண்டு ஜூன் 26-ம் திகதி சிம்மாசன பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது பேசிய தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து முழக்கமிட்டார். அதை அப்படியே பாராளுமன்ற நடவடிக்கைப் புத்தகத்தின், 125, 126, 127, 128, 129-ம் பந்திகளிலிருந்து எடுத்து இங்கு தருகிறேம். திரு. செல்வநாயகம் இந்த உரையை நிகழ்த்திய போது கைத் தொழில மீன்பிடி அமைச்சராக விளங்கியவர் சாட்சாத் திரு. பொன்னம்பலம் தான்.

### 1951-ம் ஆண்டு ஜூன் 26-ம் திகதி எச்சரித்தார் செல்வா

"...வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தமிழ் மொழியைப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற தமிழ் பேசும் மாகாணங்களாகும். எனவே இந்த நாடு, ஒரு பகுதியில் தமிழ் பேசும் பிரதேசங்களையும், கொண்டது. சிங்களம் மறுபகுதியில் சிங்களம் பேசும் பிரதேசங்களையும் பேசும் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கும் பெரும்பாலான பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்த அரசாங்கம், தமிழ்ப் பிரதேசத்தில், திட்டமிடப்பட்ட முறையில், சிங்களவர்களை குடியேற்றுவதற்கு தனது அதிகாரத்தை பாவிக்க முடியாது. ஒரு நாடு மற்றொரு நாட்டை ஊடுருவல் செய்வதைப்போன்ற ஓர் பாரதூரமான நடவடிக்கையே இதுவும் என்று கூற விரும்புகிறேன்.

'.........இந்த அரசாங்கம் என்ன செய்கிறது? கிழக்கு மாகாணத்தின் 90 வீதத்துக்கு மேலான பகுதிக்கு நீர்ப்பாசனம் வழங்கும் கல்லோயாவை எடுக்கப் போகிறது.

என். எச். கீர்த்திரத்தின:- "சிங்களவர்களின் பிரதேசம்'

செல்வா:— கிழக்கு மாகாணத்தின் சொந்தக்காரர்களாக விளங்குபவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமே. இரு சாகியத்தாருமே தமிழ் பேசுபவர்கள். இம் மாகாணத்தின் ஒரு சிறு பகுதியில், மிகக் குறைந்த அளவில் சிங்கள மக்கள் வசிக்கிறர்கள். சிங்கள மக்களின் பிரதேசத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதை நான் ஆட்சேபிக்கவில்லை.

**நான் சொல்லுவது, கல்லோயாதிட்டத்துக்கு என எடுக்கப்பட்டுள்ள பகுதி, முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியென்பதே. அரசாங்கத்தின் செலவில், அரசாங்கத்தின் அதிகாரத்தை உபயோகித்து இப்பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றப் போகிறர்கள்:**

இத்திட்டத்துக்கு எதிராக இச் சபையின் உள்ளும் புறமும் எதிர்ப்பு வளர்வதைக் கண்டதும் விவசாய அமைச்சைச் சேர்ந்த ஓர் அதிகாரி 1951-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதிய 'டைம்ஸ் ஆப் சிலோன்' பத்திரிகையில் பின் வரும் விளக்கத்தை அளித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது.

## துரோகத்துக்கு துணைபோய்விட்டு காலங்கடந்து ஓல மிடுகிறர் ஜீ. ஜீ.!

### டைம்ஸ் செய்தி

'தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கல்லோயாவில் சிங்களவர்கள் குடியேற்றப்படவிருப்பதாக குற்றம் சாட்டுவது போக்கிரித்தனமான அரசியல் பிரசாரம் என்று காணி விவசாய அமைச்சைச் சேர்ந்த ஓர் அதிகாரி வர்ணித்தார்.

குறித்த அதிகாரி மேலும் விபரம் தருகையில், முதன் முதலாக குடியேற்றப்படும் 300 குடும்பங்கள் சிங்களக் குடும்பங்களாக இருப்பதற்கு காரணம், கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அவர்கள் நிலம் இழக்க நேரிட்டதேயாம்.

இந்த முதல் குழுவினர் இந்த வருடம் செப்டம்பருக்கிடையில் குடியமர்த்தப்படுவர். அடுத்த 10 வருடங்களுக்கு ஆண்டொன்றுக்கு 2500 குடும்ப வீதம் குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளது' (இதன் பொருள், 10 வருடங்களில் 25,000 குடும்பங்கள்!)

இந்த 25,000 குடும்பங்களில் 7500 குடும்பங்கள் தாம் உள்ளூரிலிருந்து குடியேற்றப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.'

இதன் பொருள் தமிழ பேசும் மாகாணம் என்று நான் கருதும், கிழக்கு மாகாணத்தில் 75 வீதம் சிங்களவர் குடியேற்றப்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**அரசாங்கம் தனது பணத்தையும் அதிகாரத்தையும் உபயோகித்து தமிழ் பிரதேசத்தில் 75 வீதம் சிங்களவர்களைக் குடியேற்ற திட்டமிடுகிறது. பல இனங்கள் வாழும் ஓர் நாட்டில் ஓர் இனத்தின வாழ்விடத்தை அபகரிப**

(9 ம் பக்கம் பார்க்க)


# ஹெல்த் ஜோய் போட்டியில்

BCC

## 1000 பரிசுகளுக்குமேல் வெற்றி பெறலாம்

| 1-ம் பரிசு: | 2-ம் பரிசு: | 3-ம் பரிசு: | 4-ம் பரிசு: |
|---|---|---|---|
| ஒரு சிங்கர் குளிரூட்டியுடன் 1000 ரூபா. | ஒரு சிங்கர் தையற்பொறியுடன் 500 ரூபா. | ஒரு குருண்டிக் ரேடியோவுடன் 200 ரூபா. | ஒரு றலி மிதிவண்டியுடன் 100 ரூபா. |

1000 தேற்றப் பரிசுகள்: அத்துடன் வாரந்தோறும்

பி. சி. சி. உற்பத்திப் பொருள் உவந்தளிப்புப் பெட்டி ஒவ்வொன்று. பிரவேசப் பத்திரங்களுள் ஒரு வினவுக்குரிய விடையாவது சரியாகவுள்ள மிகுந்த துப்புரவுள்ள பத்திரத்துக்கு ஒரு வாகினி ரேடியோவும் 25 ரூபாவும் பரிசாக வழங்கப்படும்- ஒவ்வொரு கிழமையும்.

உங்களுக்குத் தேவையான முழு விதிகளும் அடங்கிய மேலதிக பிரவேசப் பத்திரங்களை உங்கள் ஹெல்த் ஜோய் விற்பனையாளரிடம் அல்லது கையிருப்பாளரிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

## முடிவு தேதி: 1968 ஆகஸ்ட் 31.

6. பிரவேசப் பத்திரங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

**பி. சி. சி. ஹெல்த் ஜோய் போட்டி.**
அஞ்சற் பெட்டி இல: 631, கொழும்பு.

கத்தரிக்க அல்லது படிசெய்க | ஹெல்த் ஜோய் போட்டி கூப்பன் | இப்பிரவேசப் பத்திரத்துடன் ஹெல்த் ஜோய் சுற்றுறை ஒன்று சேர்ந்து அனுப்பிவையுங்கள்.

| படம் | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| தலையங்கம் | 3 | | | | |

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

விற்பனையாளர் அல்லது ... பெயர்: ..........................................

..........................................

முகவரி: ..........................................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமத்தொழிற் சிறப்பிதழ்

# நெற் காணியில் சிறுபோக காலத்தில் உப உணவுப் பயிர் செய்கையில் ஈடுபடலாம்!

## நெல் பயிரிட்டு ரூபா 750 வருமானம் பெற்ற இடத்தில் மிளகாய்பயிரிட்டு ரூபா 2000 லாபம் பெற வாய்ப்பு!

அனுராதபுர, பொலநறுவ மாவட்டங்களில் சிறுபோக காலம் தண்ணீர் போதாமையால் பயிர்ச் செய்கைக்கு அதிகம் பயன்படுவதில்லை.

மூன்றுமாதவயதான நெல் வழுவ்பயான நீர்ப்பாசனப் பரப்பில் அரைவாசியில் உண்டுபண்ணப்பட பெருங்குளங்களிலிருந்து நீர் போதுமானது.

சில சமயங்களில் அவ்வித பயிரைத்தானும் விளைவுறுத்தப் போதிய நீர் கிடைப்பதில்லை. கதிர்குடற்பருவத்திலிருக்கும்போது சடுதியாகத் தண்ணீர் தட்டுப்படுவதால் பயிர் பாழாகக்கூடும் அல்லது தாழ்ந்த விளைவைத் தரும்.

வயல்களில் உண்டுபண்ணத் தக்க வேறு பயிரினங்கள் இல்லையாகையால் விவசாயிகள் நெல்லை விதைத்து ஆபத்துக்குள்ளாகின்றனர்.

சிறுபோகத்தில் நெற்பயிரைச் சீராக உண்டுபண்ணப் போதிய தண்ணீர் குளங்களிற் கிடைப்பதில்லையாலும் கிடைக்கும் நீரைக் கொண்டு சின்ன வெண்காயம், தட்டைப்பயறு, பாசிப்பயறு, நிலக்கடலை, மிளகாய் ஆகிய துணைஉணவுப் பயிரினங்களை உண்டுபண்ணலாமென்பதை கமத்தொழிற்றிணைக்கள உத்தியோகத்தர் அறிந்துகொண்டனர்.

உதாரணமாக, நிலக்கடலையின் விலை ஓர் அந்தருக்கு ரூபா 70-00 ஆகும். இது உத்தரவாத விலையிலும் ரூபா 20-00 அதிகமானது. பாசிப்பயிற்றின் விலை இருத்தலுக்கு 60-80 சதங்களாகும். உலர்வலய விவசாயியின் காலை உணவுக்கு இது பெரிதும் பயன்படுகின்றது.

தட்டைப்பயறு இருத்தல் 40-50 சதமாகவும் பாசிப்பயறு 60-80 சதமாகவும் விற்கலாம்.

சின்ன வெண்காயம் மிக்க இலாபகரமானது. அது ஆனி ஆடியில் நாட்டப்பட்டு செப்தெம்பர், ஒக்டோபரில் கிண்டியெடுக்கப்படுகிறது. அதனைச் சேகரித்து நவம்பர்-திசெம்பரில் விற்ருல் இருத்தலுக்கு 50-60 சதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, அனுராதபுர மாவட்ட மேலதிக கமத்தொழில் உத்தியோகத்தர் திரு. வில்மெட் வீரரத்தின அவர்களும் எலகர குடியேற்றத்திட்ட முயற்சித் தலைமை உத்தியோகத்தர் திரு. பி. பினிதிய-ஆராச்சி அவர்களும் உழவர் பெருமக்கள் சிலரை அவர்களுடைய தோட்டத்தில் பரிசோதனை முறையில் துணைஉணவுப் பயிரினங்களை உண்டுபண்ணுமாறு ஏவியுள்ளனர்.

வழமையாக ஓர் ஏக்கருக்குப் பாய்ச்சும் தண்ணீர் இதனுல் இன்று 20-25 ஏக்கர்களிலுள்ள துணைஉணவுப் பயிரினங்களுக்குப் பாய்ச்சப்படுகின்றது. வெங்காயத்துக்கு 3-7 நாட்களுக்கொரு முறையாகவும் மிளகாய்க்கு 14 நாட்களுக்கொருமுறையாகவும், நிலக்கடலை, தட்டைப்பயறு, பாசிப்பயறு ஆகியவற்றிற்கு 20 நாட்களுக்கொருமுறையாகவும் தண்ணீர் இறைப்பு நடைபெறுகின்றது.

இப்பரிசோதனை பெரும் வெற்றி ஈட்டியுள்ளது. எப்பவலையைச் சேர்ந்த ரி. எம். ரிக்கிரிபண்டா முதலாளி சந்தோஷத்தின் மிகுதியால் தனது 5 ஏக்கர் வயற்பரப்பிலும் துணை உணவுப் பயிரினங்களையே அடுத்த சிறுபோகத்தில் உண்டுபண்ணத் திட்டமிட்டுள்ளார். அவர் அதிட்டமுள்ளவராயிருந்தால் ஒரு ஏக்கர் நெல்லில் ரூபா 650-750 பெற்றுள்ள இடத்திலே மிளகாய் முலம் ரூபா 2000 பெற்றுக்கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையுடன் உளர்.

இப்புதிய திட்டத்தைப் பின்பற்றும் இன்னெருவர் சலியபுரத்தைச் சேர்ந்த திரு. எஸ். எச். மகாதியூல் வாவா ஆவர். இவரது 15 ஏக்கர் வயற்பரப்பில் ஏழரை ஏக்கர்களில் அவரயப் பயிர்களும் காய்கறிப் பயிர்களும் உண்டுபண்ணப்பட்டன.

எலகர குடியேற்றத் திட்டத்தில் 24 ஆம் வெளியில் முற்போக்கு விவசாயியான திரு. பி. ஏ. குலரத்தின அவர்கள் சோயபோஞ்சி, பாசிப்பயறு, நிலக்கடலை ஆகியவற்றைத் தமது தோட்டத்திலே பெருமளவில் உண்டுபண்ணுவது மல்லாமல் அவ்வெளியிலே பலரை அவ்வித பயிரினங்களை உண்டுபண்ணவும் செய்துள்ளனர். அவரின் அபிப்பிராயப்படி ஒரு ஏக்கர் நெல் வேளாண்மைச் செலவினங்களும் (ரூபா 300-ரூபா 350) ஓர் ஏக்கர் துணை உணவுப் பயிரினங்களின் செய்கைச் செலவினங்களும் ஏறத்தாழச் சமமானவை. சிறுபோகத்தில் நெல் வேளாண்மை நம்பிக்கையற்றது. ஆனுல் துணை உணவுப் பயிரினங்களின் செய்கையின் வெற்றி உறுதியானது.

வடமத்திய மாகாணத்திலுள்ள ராஜங்கனை, கெக்கிராவ, பலகல், கட்டுக்கில்லியாவ, ககால, கிங்குறுவாளி ஆகிய பல்வேறு கிராமங்களில் உள்ள விவசாயிகள் சொல்லப்பட்ட பரிசோதனைகளைக் கண்டு நம்பிக்கை பெற்று அடுத்த சிறுபோக காலத்தில் தங்கள் துணை உணவுப் பயிர்ச் செய்கையை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளனர்.

துணை உணவுப் பயிரினங்களின் செய்கை கூடுதலான வருவாயைத் தருவதுமல்லாமல் அவற்றிற்காகச் செய்யப்படும் களைகட்டல், பசளையிடல் ஆகியவற்ருல் அடுத்து வரும் நெற்பயிருக்கு உகந்ததாக காணி திருத்தப்படுவதுமாகும்.

அனுராதபுர மாவட்டத்தில் சிறுபோக காலத்தில் ஏறத்தாழ 100000 ஏக்கர்

(7-ம் பக்கம் பார்க்க)

## நீங்களும் பங்காளியாகலாம்

சாதாரண பொதுமக்களும் பங்காளர்களாகக் கூடிய முறையில் அரசாங்க ஆதரவுடன் கூடிய ஓர் வர்த்தக நிறுவனம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. 'கொன்சொலிடேற்றட் எக்ஸ் போட்ஸ் (சிலோன்) லிமிட்டெட் என்றஸ்தாபனமே இந்த நிறுவனத்தைதயும் தொடங்கவிருக்கின்றது.

இந்நிறுவனத்தின் 51 வீதப்பங்கு கூட்டுமொத்தவிற்பனவு நிறுவனத்திற்கு அளிக்கப்படும். மீதி 49 வீதபங்கும் பொதுமக்களிடம் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.

ஒவ்வொன்றும் ரூபா இரண்டு வீதம் ஒன்றரைக் கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படும். பங்காளியாக விரும்பும் ஒருவர் ஆகக் குறைந்தது ரூபா 2-00 பெறுமதியுள்ள 25 பங்குகளை வாங்கவேண்டும்.

இலங்கையின் ஏற்றுமதியை விஸ்தரிப்பதையும் முன்னேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டே இந்நிறுவனம் தொடங்கப்படவிருப்பதாக தெரிகிறது.


பிரபலமான

லின்-டொல்-6-ஜி

லின்--டோல்--6ஜி என்னும் நுண்பொடி போன்ற கிருமி நாசினி

- சிக்கனமான விலையில் கிடைப்பது
- அதிக சக்திவாய்ந்தது
- நெற்பயிரை அழிக்கும் பூச்சி புழுக்களை அகற்றுவது
- பாதுகாப்பானது

லின்—டோல்—6ஜி என்னும் நுண்பொடி போன்ற கிருமி நாசினியையும், பீப்—செப் என்னும் நுண்பொடிபோன்ற களைப்புற்கொல்லியையும் உபயோகிப்பதன் மூலம், உங்கள் விளைச்சல் இலாபகரமாகப் பெருகுவதைப் பார்ப்பீர்கள்.

இப் புதிய நுண்பொடி போன்ற விவசாய இரசாயனப் பொருட்களை பீச்சுக் குழாய்களின் உதவியின்றி கைகளினுலேயே தூவ முடியும். உலகத்திலேயே அதிக அரிசி விளையும் நாடான பிலிப்பைன்சிலேயே லின்--டொல் மிகவும் சக்திவாய்ந்தது என்பது நிருபிக்கப்பட்டிருக்கிறது.

ஏக விநியோகத்தர்கள்:

மக்வூட்ஸ் லிமிட்டெட்,

மக்கலம் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கருக்கு 110-150 புசல் விளைச்சல் தரும் புதிய வகை விதை நெல்

## ஐ. ஆர். 8 ன் சிறப்பியல்புகள்!

இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகும் பெரும்போக நெல் வேளாண்மையிலே பயன்படுத்தப் பிலிப்பையின் நாட்டிலிருந்து 10,000 புசல் ஐ. ஆர். 8 விதை நெல் இலங்கைக்குக் கொண்டு வரப்படும்.

சர்வதேச நெல் ஆராய்ச்சித் தாபனத்தாரின் படைப்பான ஐ. ஆர். 8 ஒரு கலப்புப் பிறப்பாக்கல். இது நான்கு மாதங்களில் விளைவுறும். இதன் போற்றற்குரிய அம்சங்கள் இரண்டு. இதன் பயிர் பாட்டத்தில் படுப்பதில்லை. இது ஓர் ஏக்கருக்கு 110.150 புசல்நெல் விகிதம் விளைவு தரும் பெருமை உள்ளது.

நம்நாட்டுக் கலப்புப் பிறப்பாக்கல்களான ஏச் 4, ஏச் 7, ஏச் 8 ஆகியவற்றின் பயிர் பாட்டத்தில் சரிந்து சேற்றில் கிடக்கும் இயல்புடையன. ஆனல் ஐ. ஆர். 8 ன் பயிர் அதன் வைரமான தண்டின் காரணமாக அறுவடையாகும்வரை நிமிர்ந்து நிற்கும்.

இவ்வியல்பு பயிரைச் சுலபமாக இயந்திரத்தினலோ கையினலோ அறுவடை செய்ய உதவுகிறது. இதன் நெல் மணிகள் மண்ணுடன் தொடர்பு கொள்வதில்லாக் காரணத்தால் வீண் போவதில்லை.

110-150 புசல் விகித விளைவைப் பெற்றுக் கொள்ள வளமாக்கிப் பிரயோகத்திலும், பூச்சிபுழு நோய்களிலிருந்து பயிரைக் காத்தலிலும் முக்கியகவனம் செலுத்துதல் அவசியம்.

ஐ. ஆர். 8 ஆனது விதை நெல்தொற்றுநீக்கம், விதை நெல் ஊற வைத்தல், வயல் பண் படுத்துதல், விதை விகிதம் பயிரிடற்றூரம் இன்னும் இல்னேரன்ன செய்கை முறைகளில் இந்நாட்டில் உண்டு பண்ணப்படும் ஏனைய நெல்லினங்களிலும் வேறுபடுவதில்லை.

எடுத்துக் காட்டற்குரிய அளவில் இது வேறுபடுதல் செயற்கை உரத் தேவைப் பாடுகளில் மட்டுமே.

உதாரணமாக - மற்றைய நெல்லினங்களுக்கு அடிக்கட்டாக நைதரசன் பிரயோகிக்கப்படுவது மில்லை. அதன் பிரயோகம் சிபார்சு செய்யப் படுவதுமில்லை. ஆனல் ஐ. ஆர்-8 க்கு அடிக்கட்டாக ஓர் ஏக்கருக்கு 56 இருத்தல் யூரியா அல்லது 112 இருத்தல் அமோனியம் சல்பேறறு விகிதம் பிரயோகித்தல் முக்கியம். இப்பிரயோகத்தின் போது ஓர் ஏக்கருக்கு 224 இருத்தல் செறிவுச் சுப்பபொசுபேற்று விகிதமும் 112 இருத்தல் பொற்றுசு மூரியேற்று விகிதமும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்,

ஐ. ஆர். 8 இளம் பருவத்தில், அதாவதுஏச்-4'ஏச்-7, ஏச்-8 அல்லது மற்றைய உள்ளூர் நெல்லினங்களின் மட்டம் பெயரும் பருவத்துக்கு முந்தி, மட்டங்களை ஈனும். ஆகையினலே ஐ. ஆர். 8 க்கு ஆரம்பத்திலே நைதரசம் அவசியம்.

வளரும் ஐ. ஆர். 8 க்கும் இருதடவைகளில் பெருமளவில் நைதரசன் பிரயோகிக்கப்படுதல் முக்கியம்.

விதைத்து அல்லது நட்டு 21-24 நாட்களில் ஓர் ஏக்கருக்கு 112 இருத்தல் யூரியா அல்லது 224 இருத்தல் அமோனியம் சல்பேற்று விகிதமான பிரயோகத்தை வளர் பயிருக்கு முதற்றடவையாகச் செய்து கொள்ளலாம்.

விதைத்து அல்லது மாற்றி நாட்டி 50 நாட்கள் சென்ற பின்னர் ஓர் ஏக்கருக்கு 168 இருத்தல் யூரியா அல்லது 236 இருத்தல் அமோனியம் சல்பேற்று விகிதமான பிரயோகத்தை வளர் பயிருக்கு இரண்டாம் முறையாகச் செய்து கொள்ளலாம், இந்த வேளையில் ஓர் ஏக்கருக்கு 42 இருத்தல் விகிதம் பொற்றுசு மூரியேற்றையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

### உற்பத்திச் செலவின் பொதுப்படையான விவரம்

(ஆண் ரூபா 4/-, பெண் ரூபா 3/- நாளொன்றுக்கு)

வயல் பண்படுத்தல் திருக்டர் ரூபா 75.

10 ஆண்கள் ரூபா 40.

விதை நெல் (ஒரு புசல்) ரூபா 20.

வளமாக்கிகள் . (உதவிப் பணமில்லா விலையில்) ரூபா 275.

நாற்றங்கால் பராமரிப்பு, நாற்றுப்பிடுங்கல், கொண்டு செல்லுதல், வரிசையில் மாற்றி நடுதல் 8'' / 8'' 6 ஆண்களும் 18 பெண்களும் ரூபா 79.

களைகட்டல் 6 பெண்கள் ரூபா 18.

பூச்சிபுழு நோய் கட்டுப்படுத்தல் ரூபா 80.

நீர்பாய்ச்சல்-7 ஆண்கள் ரூபா 28.

அறுவடை, கொண்டு சென்று சூடுவைத்தல் 2 ஆண்கள், 6 பெண்கள் ரூபா 26.

சூடடித்தல் (திருக்டர் கால் நாள்) ரூபா 20.

3 ஆண்கள் ரூபா 12.

விற்பனைக்கு ஒழுங்கு செய்தல் 8 ஆண்கள், 7 பெண்கள் ரூபா 53.

மொத்தச் செலவு ரூபா 725.

எதிர்பார்ப்பு வருமானம் 120 புசல்-ரூபா 14/- ரூபா 1680.

உதவிப்பண விலையில் 3 அந்தர் வளமாக்கிகள் இப்போ பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையிலே உண்டுபண்ணப்பட்டுவரும் ஏச்-4, ஏச்-7, ஏச்-8 ஆகியனவற்றுக்கும் மற்றும் நெல்லினங்களுக்கும் பெருமளவு வளமாக்கிப் பிரயோகம் சிக்கனமற்றதாகும். ஏனெனில், இப்பயிரினங்கள் பசளை கூடுதலானவுடன் அதிகம் மதாளித்து நிலத்தில் படுத்துவிடும்.

எனவே, ஐ. ஆர்-8ன் சிறந்த இயல்பு என்னவென்ருல் இது நிமிர்ந்து நிற்கின்றது. பயிர் படுப்பதில்லை. நெற்ருள் வளர்ச்சி கட்டுமட்டானது. அதனுலே வளமாக்கி உச்ச அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

இத்தருணத்தில் ஓர் அபாய அறிவிப்பு [illegible]

யம். நெற்பயிருக்குப் பெருமளவில் வளமாக்கி பிரயோகிக்கப்படும்போது பயிர் கூடுதலான அளவில் சாறுடையதாகும். அதனுல் பயிர் பூச்சிபுழு நோய்த் தாக்கத்துக்குப் பெரிதும் பாத்தியப்படும்.

ஆகவே, பனிப்பூச்சிகள் (திரிப்புகள்) இலைத்தத்துக்கிளிகள், கம்பளப்புழுக்கள், கூடுகாவிகள், சந்துகுத்திகள், மூட்டைப் பூச்சிகள் பயிரில் நடமாடுதலை இடையருது கவனித்துவருதல் வேண்டும். அவற்ருல் விளையும் சேதத்தைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை கைக்கொள்ளப்படுதல் நலம்.

நைதரசன் பெருமளவில் நெற்பயிருக்குப் பிரயோகிக்கப்படும்போது 'வெடிப்பு' நோய் அதிகம் தோன்றல் இயல்பு. இதனையும் கவனித்து வருதல் வேண்டும்.

ஐ. ஆர். 8 சந்துகுத்திப் பூச்சியினலும் வெடிப்பு நோயினலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இவற்றைத் தடுக்க முற்காப்பு முறைகளைக் கைக்கொள்ளுதல் விரும்பத்தக்கது.

சந்துகுத்தியைத் தடுக்க ப்யி. எச். சி. 6 விகிதம் மணிகளைப் பயன்படுத்தலாம். வெடிப்பு நோயை பிளாஸ்ரின் அல்லது கசுமின் என்னும் இரசாயனப் பொருளால் தடுக்கலாம்.

### நெற் காணியில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நெற்காணி தரிசு கிடக்கின்றது. அதில் ஏறத்தாழ 10000 ஏக்கர்களின் துணை உணவுப் பயிரினங்களைக் சாகுபடி செய்யலாம். அதுபோலவே எலகராத் திட்டத்திலும் சிறுபோக காலத்தில் 2500 ஏக்கர்களில் துணை உணவுப் பயிரினங்களை உண்டுபண்ணலாம்.

ஒவ்வொரு சிறுபோகத்திலும் சொல்லப்பட்ட 12,500 ஏக்கர்களிலும் துணை உணவுப் பயிரினங்களை உண்டு பண்ணியவரின் பிறநாட்டுச் செலாவணியில் மதிப்புக்குரிய தொகை மிகுதியாகும். இன்று ஒருபோகச் செய்கையாளனுகவும் ஒரு பயிர் மட்டும் உண்டுபண்ணுபவனுமான உலர்வலய விவசாயின் பொருளியல் நிலை உயரும்.


எச்சரிக்கை!

உங்கள் மூலதனத்தைப் பாதுகாப்பதற்கு

நம்பிக்கை வாய்ந்த

மஸே-பெர்குஸனின் உதிரிப் பாகங்களை மட்டுமே உபயோகியுங்கள்



சிறந்ததையே வாங்கியுள்ளீர்கள்

சிறந்ததையே பொருத்துங்கள்!

கிடைக்குமிடம்::

மஸே-பெர்குஸனின் விற்பனையாளர்களிடமும்
மற்றும்

பிரெவுண் அன்ட் கம்பனி
லிமிட்டெட்,
கமத்தொழிற் பகுதி,
தேவநம்பியதிச றேட்டு,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. அன்னிக்கிறிஸ்ரி,
யாழ்ப்பாணம்

கே: இப்போது நடிகவேள் எம். ஆர். ராதா என்ன செய்து கொண்டிருக்கிறார்.

ப: சிறைச்சாலையில் 'ரெஸ்ட்' எடுத்துவருகிறார்.

ஃ

கே. ராமஜெயம்,
தெல்தொட்டை

கே: ஜெய்சங்கர்' ஜெயலலிதாவிற்கெல்லாம் கூட ரசிகர் மன்றம் ஆரம்பித்துவிட்டார்களே ஏன்?

ப: உலகில் பைத்தியக்காரர்கள் அதிகரித்து வருவதால்தான்!

கே: ஒரு நடிகைக்கு புதுமுக நடிகைக்கு தெரிய வேண்டியது என்ன?

ப: தேவையான நேரத்தில், தேவையான இடத்தில் வளைந்து கொடுக்க தெரிய வேண்டும்!

ஃ

க. யோகநாதன்,
கோப்பாய்

கே: 'இரகசிய போலீஸ் 115' ஜுபிடர் (திருச்சி), சிந்தாமணி (மதுரை) ஆகிய தியேட்டர்களில 100 நாட்களுக்கு மேல் ஓடியதாமே: உண்மையா?

ப: உண்மையல்ல!

கே: 'இருமலர்கள்' சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடியதா?

ப: ஆம்!

ஃ

ஆர். ஆனந்தசர்மா,
நீர்கொழும்பு

கே: ஜீ பூம்பா ஜாவர் எங்கே இருக்கிறார்? எப்போது காட்சியளிப்பார்?

ப: மீண்டும் சாடிக்குள் அடங்கிவிட்டார். 2000 ஆண்டு கழிந்துதான் இனி வருவாரோ?

ஃ

செல்வி கே. ஜெயம்:
தெல்தொட்டை

கே: முதல் முதலாக நாகேஸ் நடித்த முதல் படம் எது?

ப: தாமரைக் குளம்:
எஸ். கதிரேசன்,
மட்டக்குளி

கே: எம். ஜி. ஆர், சிவாஜி இருவரில் அரச படங்களில் அதிகம் நடித்தவர் யார்?

ப: எம். ஜி. ஆர்.


# பல மடங்கு பயன் பெற பாவியுங்கள் திறீ றோஸஸ்




தரத்தை நாடும் புகை பிடிப்பாளர், வேறெதைக் கொடுத்தாலும் விட்டு மாற விரும்பாத சிறப்புகள் சில உண்டு. சுவை அவற்றில் ஒன்று — செறிந்த சுவை! நேர்த்தியான புகையிலைக் கலவை மற்றது. அதுவே உண்மையான திருப்தி தரும் புகைபிடி இன்பத்தை எப்போதும் அளிப்பது.

இந்தச் சிறப்பெல்லாம் சேர்ந்த ஒரே சிகரெட்தான் — திறீறோஸஸ்.

அது இலங்கையின் அபிமான சிகரெட்டாகத் திகழக் காரணம் அதுவே!

தரத்தை நாடுவோர் அதை விடச் சிறப்புக் குறைந்ததை நாடாமலிருக்கக் காரணமும் அதுவே!

P-0459

**திறீ றோஸஸ்**—முற்றிலும் சுவையான முழுத் திருப்தி தரும்.




### முட்டை மயிர்

முட்டை விலை ஏறுகிறது.

—செய்தி.

—முட்டையில் மயிர் பிடுங்குவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு இனி வாய்ப்பாகி விடுமோ என்று ஏங்குகிறார் ஒரு அரசாங்கக் கட்சி உறுப்பினர்.

### எப்படி அம்மா?

சிறுபான்மையரின் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தயார். ஆனால் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம்.

—சிறிமாவோ.

—சரி, தமிழரசுக் கட்சியின் கொளகைகளை ஏற்காவிட்டால் வேறு எப்படி சிறுபானமைப் பிரச்சினைகளை தீர்க்கபோகிறீர்கள்? அதையாவது வெளியிடலாமே!

### புதிய கதை!

இஸ்லாமிய சோசலிச முன்னணி மாநாட்டை முறியடிப்பதற்கான சதித் திட்டங்களை வகுக்குமாறு தமிழரசார் அரசாங்கத்தை தூண்டியிருக்கின்றனர்.

—பதியுதீன் மாமூத்.

—படுதோல்வியில் மாநாடு முடிந்ததை மூடி மறைக்க இப்படியொரு புதிய பிரசாரம் தேவைப்படுகிறதோ?

### நாட்டுப் பிரிவு

நாட்டைப் பிரிக்க நாம் விரும்பவில்லை.

—'திரு'.

—ஆனால் சிங்கள தீவிரவாதிகள் விரும்புகிறார்களே!

### ஏக்கம்

மந்திரிகளைப் போல திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பதிலளித்துப பேசுவதேன்?

—வவுனியா பா. உ.

—ஏன் அவரைப்போல பேசுவதற்கு தன்னால் முடியவில்லையே என்று ஏங்குகிறாரோ வவுனியா எம. பி.? அதனால்தான பொறுமையாக இருக்கிறதோ?

### சுட்டு எரிப்பாராம்

சுதந்திரனை சுட்டெரிக்க வேண்டும்.

—வவுனியா எம். பி.

—அதற்கு முன் அடுத்த தேர்தலில் தங்கள் வாக்குச் சீட்டுக்களால் வவுனியா எம். பி.யை சுட்டெரித்துவிடப் போகிறார்கள் வவுனியாத் தொகுதி வாக்காளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் கூப்பன்களைப் பறிமுதல் செய்வது கொடூரம்!

## பாராளுமன்றத்தில் உடுவில் எம். பி. பேச்சு!

“யாழ்ப்பாணத்திலே வெங்காயம் உற்பத்தி செய்து வந்த விவசாயிகள், வெங்காயத்தின் கொள்வனவு கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் அதிகரிக்காததனால், இப்போது அதைக் கைவிட்டு வருகிறார்கள். இதனால் இந்நாட்டில் வெங்காயத் தட்டுப்பாடு விரைவில் ஏற்படப்போகிறது. இதைத் தவிர்ப்பதற்கு, வெங்காயத்தின் கொள்வனவு விலையை அதிகரித்து விவசாயிகளுக்கு உற்சாக மூட்ட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இவ்வாறு நிதி நிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார். திரு. தருமலிங்கம் தமது பேச்சில் வடபகுதிவிவசாயிகளின் பல தேவைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்திக்க வேண்டுமென வற்புறுத்தினர்.

திரு. தருமலிங்கம் வலியுறுத்திய கருத்துக்கள் வருமாறு:—

(1) உருளைக்கிழங்கு உற்பத்தியில் அபரிமிதமான ஆர்வம் காட்டி வரும் வட பகுதி விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு உரிய காலத்தில் தாராளமாகக் கிடைக்க அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும்.

(2) பீட்ரூட் உற்பத்தி செய்யும் விவசாயிகளும் நேரகாலத்தில் விதை கிடைக்காததால் கஷ்டப் படுகின்றனர். இதனை நீக்க வேண்டும்.

(3) வட பகுதி விவசாயிகள்-குறிப்பாக கிளிநொச்சி தொகுதி விவசாயிகள் தங்களுக்கு தேவையான பசளை உரம் நேரகாலத்துக்கு கிடையாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே பசளை உரமும் விதை நெல்லும் உரிய நேரத்தில் கிடைக்க வழி காண வேண்டும்.

(4) யாழ்ப்பாணத்தில் மிளகாய் உற்பத்தி அதிகரித்திருப்பினும், Leaf curl என்றொரு வகை நோய்மிளகாய் கன்றுக்கு ஏற்படுவதன் மூலம் உற்பத்தி பாதிக்கப் படுகிறது. இந்த நோயைத் தீர்க்கும் மருந்தைக் கண்டு பிடிக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

(5) விவசாயிகள் வாங்கிய கடனை அரசாங்கத்துக்கு திருப்பிக்கொடுக்காததற்காக கூப்பன் புத்தகங்களை பறிமுதல் செய்வது கொடூரம். கொடுத்த கடனை தவணை முறையில் சிறுகச் சிறுகப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(6) இயந்திரக் கலப்பைகளினதும், அவற்றின் உதிரிப்பாகங்களினதும் விலையை அரசாங்கம் எக்கச் சக்கமாக அதிகரித்துவிட்டதால், நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மிகுந்தகஷ்டமடைகிறார்கள் இவற்றின் விலையைக் குறைக்காவிட்டால் நெல் உற்பத்தி ஸ்தம்பித நிலையடைந்து விடும்.

(7) சைவ மக்களின் முக்கிய உப உணவுப் பொருட்களான உழுந்து, பாசிப் பயறு, சர்க்கரை போன்ற பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும்.

## வட பகுதி...

(1-ம் பக்கம் தொடர்ச்சி

குகளை சிதறவிடாமற் செய்வதே இதன் நோக்கமாம்.

மற்றோர் தமிழ் காங்கிரஸ் எம். பி. சுதந்திரக் கட்சியுடனும் தேர்தல் கூட்டு செய்ய வேண்டும் என வற்புறுத்தி வருகிறாராம். இந்த எம். பி. யின் தொகுதிக்கு அடுத்துள்ள தொகுதி ஓர் சுதந்திரக் கட்சி உறுப்பினரின் தொகுதியென்றும், இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்றும் கூறப்படுகிறது.

தனது தொகுதியிலுள்ள சிங்கள வாக்குகளை மட்டுமே அடுத்த பொதுத் தேர்தலில் நம்பியிருக்கும் குறித்த எம்.பீ., சுதந்திரக்கட்சி தம்முடன் போட்டியிடாதிருக்கும்படி செய்ய இப்பொழுதே முயற்சியெடுத்து வருகிறாராம்.

## அறப்போர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டுகட்கு தமிழிலிருந்து மலையாளம் என்ற மொழியும் அதற்கு முன்னர், தெலுங்கும் உருவாகின.

தமிழ்மொழி நாட்டுக்கு நாடு சிதைந்து போகவிடாது பாதுகாக்கவேண்டியபொறுப்பு அரசாங்க திணைக்களங்களில் மொழி பெயர்ப்பாளர்களாகப் பணியாற்றுபவர்களிடம் மிகுதியாக உண்டு. இங்குள்ள மொழிபெயர்ப்பாளர் சிலர், தூய தமிழ் சொற்களை புறக்கணித்து, மேலதிகாரிகளுக்கு வால் பிடிப்பதற்காக தமிழ் மொழிக்குள் சிங்களச் சொற்களைப் புகுத்துவதிலும், சிங்கள ஓசையுடன் இணைந்த தூய்மையற்ற தமிழ் சொற்களை உபயோகிப்பதிலும், ஈடுபட்டுள்ளனர். இது படுதுரோகமானதாகும். இத்தகைய மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்தவேண்டும்.”

இறுதியில் கவிஞர் ஆனந்தன் நன்றியுரை நிகழ்த்தினர்.

## மெய்கண்டான் அதிபரின் மறக்க முடியாத தொண்டு

தமிழ், சைவம் இரண்டையும் கண்ணெனப் போற்றி வருபவர் மெய்கண்டான் அதிபர் திரு. ஆர். இரத்தின சபாபதி என்பதும், தமிழ் வளர்ச்சிக்காகவும், சைவத்தின் உயர்ச்சிக்காகவும் தன்னால் முடிந்தளவு அன்னார் உதவி புரிந்து வருவதும் யாவரும் அறிந்ததே.

இத்துறையில் இப்பொழுது ஓர் புதிய தொண்டை திரு. இரத்தினசபாபதி ஆற்றியுள்ளார். சைவத்துக்கும், தமிழுக்கும் மறக்க முடியாத தொண்டாற்றிய தவத்திரு. ஆறுமுக நாவலர் ஐயா அவர்களின் திரு உருவத்தை வண்ணப்படமாக பல்லாயிரக்கணக்காக அச்சிட்டு இலவசமாக சைவத் தமிழ் மக்களுக்கு வினியோகித்து வருகிறார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையில் நடைபெற்ற நாவலர் சபையின் ஆலோசனைக் கூட்டத்திலும் நல்லூர் கந்தன், தேர், தீர்த்த விழாக்களின் போதும் மெய்கண்டான் நிறுவனத்தாரால் நாவலர் வர்ணப் படம் இலவசமாக வழங்கப்பட்டது.

## சிங்களக்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பது அரசியல் நெறிக்கே புறம்பானது.

அரசாங்க ஆதரவுடன் தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களவர்களை குடியேற்றுவதை நாம் எதிர்க்கிறோமே தவிர சிங்களப் பொது மக்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு செல்வதையோ, தமிழ் பொது மக்கள் சிங்களப் பகுதிக்கு வருவதையோ நாம் எதிர்க்கவில்லை’.

# தமிழரசுத் தலைவர்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி கொண்டு விட்டது.

இதன் காரணமாகத் தான், தமிழரசுக்கட்சியைக் கண்டு இன்று வெம்புகிறார்கள்: வெதும்புகிறார்கள். மாவட்ட சபை இல்லையென்ற பின் கூட ஒட்டிக்கொண்டிருக்கிறார்களே என்றுஓலமிடுகிறார்கள்.

கூட்டுக்கட்சிகளுக்கு மட்டுமல்ல, தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் இதனால் மிகப் பெரிய ஏமாற்றம் தான். தமிழரசுக்கட்சி மாவட்ட சபை இல்லை யென்றவுடன் வெளியேறிவிடும். உள்ளே புகுந்து ‘ஏதாவது’ கிடைக்குமாஎன்று துழாவலாம் என்ற அற்ப ஆசையுடன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்த தமிழ்காங்கிரஸ்காரர்களுக்கும் தமிழரசுக்கட்சியின் ‘இராசதந்திர நடவடிக்கை வயிற்றில் புளியை கரைத்து விட்டிருக்கிறது.

**இல்லா விட்டால் தேசிய அரசாங்கத்தில் தாமும் இன்னும் ஓர் அங்கமாக இருப்பதையும் மறந்து விட்டு தமிழரசுக் கட்சியைப் பார்த்து ஏன் இன்னும் இவர்கள் வெளியேறுமல் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என தமிழ் காங்கிரஸ்காரர்கள் கூட்டங்களில் நின்று ஒப்பாரி வைப்பதேன்?**

தேசிய அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பது மூலம் மாவட்டசபை மசோதா நிறைவேற முடியாமற்போன சூழ் நிலையை சிருஷ்டித்து, தமிழ்எதிர்ப்பு பிரசாரத்தை சிங்கள மக்களிடையே விதைத்து, தமிழ் மக்களின் ஆசைக்கு மண்போட முனைந்த, கூட்டுக்கட்சிகளைப் பழி வாங்கும் நோக்கத்துடன்— அவர்களின் ஆசை நிறைவேறுது தடை செய்வதற்காகவே தமிழரசுக்கட்சி ‘அரசாங்கத்திலிருந்து வெளியேறுது இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் போட்டிருந்த திட்டம் எது வென்பதை ஆராயப் புகுமுன்னர் தமிழரசுக்கட்சி வெளியேறுததற்கு தமிழ் காங்கிரஸ் கட்சியினர் ஜோடனை செய்து கட்டியிருக்கும் ஓர் கதையை ஆராய்வோம். அதுதான் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீது இலஞ்சக் குற்றசாட்டு சுமத்தப்பட்டிருப்பதாயும், அதனால்தான்அவர்கள்வெளியேறத் தயங்குகிறார்கள் என்றும், மனம் புழுங்கிய நிலையில் ஓர் பிரசாரத்தை மேற்கொண்டதாகும்.

அண்மையில் பாராளுமன்றத்தில் இப்பிரசாரத்தை அப்பட்டமாக மறுத்து இப்பிரசாரம் செய்பவர்கள் யோக்கியமானவர்களாக இருந்தால், அதை நிரூபிக்க முன் வரட்டும் என்று தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சவால் விட்டிருந்தார்.

சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்வதற்காக பொதும்பலாக தமிழரசுக் கட்சியினர் மீது இலஞ்சக் குற்றச் சாட்டு இருப்பதாக மண்ணை வாரி இறைத்து விடலாம். ஆனால் குற்றச் சாட்டு எதுவும் நிரூபிக்கப் பட்டாலொழிய உண்மையாக முடியாது.

**தமிழ் காங்கிரஸ் தலைவர் மீது, அவர் மந்திரி பதவியை வகித்த போது “டுகேன்” பிரச்சினை பாராளுமன்றம் வரைகொண்டு செல்லப்பட்ட விஷயம் இன்று தமிழ் காங்கிரசில் இருக்கும் பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.**

பாராளுமன்றத்தில் இப்பிரச்சினையை அன்று எதிர்க்கட்சிகள் கிளப்பிய போது சம்பந்தப்பட்ட [illegible] பட பிரதிகள் கூட சமர்ப்பிக்கப்பட்டன. அந்நேரத்தில் அதற்கு அப்போது பிரதமராக இருந்த பெரிய சேனநாயகாவே பதிலளிக்க முன் வந்தார்.

ஆனால் நாம் இவற்றையெல்லாம் பெரிதாக தூக்கிப் பிடித்துக் கொண்டு திரியவில்லை—அதை வைத்துக்கொண்டு அரசியல் பிரசாரமும் நடத்தவில்லை. அப்படிப்பட்ட அவசியம் நமக்கு இருக்கவுமில்லை. அது பற்றி பேசுவதோ எழுதுவதோ கூட, அரசியலில் கண்ணியமற்றசெயல் என்பதே நமது கருத்தாகும்.

ஆனால், இப்போது அதைக் குறிப்பிடக் காரணமாக தமிழ் காங்கிரசின் கற்றுக் குட்டி எம். பீக்களே இருந்துவிட்டார்களே யென்று உண்மையிலேயே வருந்துகிறோம்.

இலஞ்சம் வாங்குவதும், இலஞ்சம் பெறுவதும் இன்று இலங்கையிலே மிகச் சாதாரண விடயமாகிவிட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டு ஒரு வேலையை செய்து விட்டு, அப் பாராளுமன்ற உறுப்பினருக்கு தெரியாமலேயே, அப்பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து யாருக்காக உதவிபெறப்பட்டதோ அவரிடம் இலஞ்சம் வாங்கும் கும்பலொன்று இந்நாட்டிலிருக்கிறது. இவர்களை ஆங்கிலத்தில் Conman என்று கூறப்படுவது வழக்கம்.

இப்படிப்பட்ட ‘‘கொன்-மான்’ களிடம் ஒரு வேலையை நிறைவேற்றிக் கொள்வதற்கு சென்றால் அவர்கள் தங்களுக்கு நெருக்கமான ஓர் பாராளுமன்ற உறுப்பினரைப் பிடித்து அவ்வேலையை நிறைவேற்றிக் கொடுத்துவிட்டு, ஒரு தொகைப் பணத்தை சம்பந்தப் பட்டவரிடமிருந்து கறந்துவிடுவார்கள். இது குறித்த எம். பீக்கு கூட [illegible] இலஞ்சம் கொடுத்தவரோ எம். பீக்கும் அதில் பங்கு இருக்கலாமென்று சந்தேகப்படுவார்.

ஆசிரியர்நியமனம்இடமாற்றம், போன்றபல்வேறுவிடயங்களில் இத்தகைய ஊழல்கள் தலை தூக்குவதுண்டு. தமிழ்காங்கிரஸ்எம்.பீக்களுக்கும் இது நன்றாகத் தெரியும்.

**தமிழ் காங்கிரஸ்காரர்களிலும் இலஞ்சப் புகார்கள் இருப்பதாக கூட கொழும்பிலுள்ள சில அரசியல் வட்டாரங்களில் மிகத் தீவிரமாக பேசப்பட்டு வருகிறது கடந்த சில மாதங்களாக-ஆனால் அச் செய்தியை நாம் இது வரை வெளியிடவில்லை- அது பண்புக் குறைவு என்பதால்.**

ஆனால், தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் தமிழரசுக் கட்சி மீது பொறாமை காரணமாக எந்தவித ஆதாரமுமற்ற முறையில் இலஞ்சக் குற்றச்சாட்டு இருப்பதாகக் கூறி சாணியை வாரி அடிக்கிறார்கள் என்றால், இது எநதவிதமான அரசியல் பண்பு என்பது எமக்கு விளங்கவில்லை. மனிதத் தன்மையற்றது—மிருகத்தனமானது என்று வர்ணிப்பது தவிர வேறு எதைக் கூற முடியும்?

அடுத்தகட்டுரையில் எதிர்க்கட்சிகளின்மாவட்ட சபை எதிர்ப்பின் பின்னலிருந்த காரணங்களையும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுததால், அவை எப்படி தூள் தூளாகிவிட்டன என்பதையும் ஆராய்வோம்.

## காணவில்லை



படத்தில் காணப்படுபவரும் எனது தாயாரும் மினுவாங் கொடை வாசியுமான திருமதி லட்சுமி கதிர்காமத்தில் வைத்து இம் மாதம் 8 ம் திகதி முதல் காணுமல் போய் விட்டார். 65 வயது. சிறிது சித்த சுயாதீனமற்றவர். தலை நடுக்கமுமுண்டு.

இவரைக் காணுபவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட எனது முகவரிக்கு தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

எஸ். கோவிந்தன்,
12, மொஸ்க் ரேட்,
மினுவான்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் சுதந்திரம் காட்டுக் கழுதையின் சுதந்திரமாக மாற அனுமதிப்பது ஆகாது

(சென்றவாரத் தொடர்ச்சி)

1964 ஆம் ஆண்டு இந்த நாட்டிலே உண்மையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக, முந்திய அரசாங்கம் எம்மை எவ்வளவோ வருந்திஅழைத்தும் கூட அதனைப் புறக்கணித்து ஜனநாயகம் இந்த நாட்டிலே பாதுகாக்கப்பட வேண்டும்; பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நின்ருேம்.

அந்த நேரத்தில் நாங்கள் இந்தப் பத்திரிகைகளுக்கு மாருக முன்னைய அரசாங்கத்துடன் சார்ந்து இருந்திருபோமேயாளுல் இப்படிப் பொய்யான செய்திகளை கேளைத்தனமாக எழுத இவர்களால் இன்று முடியாது. நாம் செய்தவற்றுக்கு இவர்களிடமிருந்து கிடைக்கும் நன்மை எங்களைப் பற்றி பொய்யும் புனைந்துரையுமாக எழுதிக் கொண்டிருப்பதுதான்.

ஆகவே, அவர்கள் கூறுவதைக் கண்டிக்கும் அதே நேரத்தில் எமது கொள்கையை, ஜனநாயகத்தின் பெயரால் பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை நாங்கள் கைவிடவில்லை என்றும் கூறவிரும்புகிறேன்.

### காட்டுக் கழுதையின் சுதந்திரம்

பத்திரிகைச் சுதந்திரம் என்பதை ஆங்கிலத்தில் freedom of the wild ass—'காட்டுக் கழுதையின் சுதந்திரம்' என்று சொல்வார்கள். நினைத்ததை எல்லாம், கண்ட கண்ட பொய்களையெல்லாம் கண்ட கண்டபடி எழுதும் சுதந்திரத்தை எந்தப் பத்திரிகைக்கும் கொடுக்க முடியாது.

சமீபத்திலே எங்கள் நாட்டிலே சில பத்திரிகைகள் இந்த விதத்தில் பிரசாரம் செய்துவருகின்றன. சிறப்பாக நான் ஒரு குறிப்பிட்ட கோஷ்டிப் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிட்ட வேண்டியவனுக விருக்கிறேன். 'சன்' 'தவச' 'தினபதி' குழுவைச் சேர்ந்த பத்திரிகைகள் எழுதுகின்ற விதம் இந்த நாட்டிலே மிகக் கேவலமான நிலையை உருவாக்குவதாகஇருக்கின்றது.

### மூன்று வேடம்

தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கிறது அரசாங்கம்; தமிழரசுக் கட்சி தமிழர்களைக் காட்டிக் கொடுதது விட்டது என்று தமிழ் மக்களைத் தூண்டி விடக் கூடிய முறையிலே ''தினபதி''யில் எழுதுவார்கள்.

'தவஸ'ப் பத்திரிகையிலே எழுதுகின்ற பொழுது, பிரதமர் சிங்கள மக்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள், சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு விற்று விட்டாகள் என்ற தோரணையில் எழுதுவார்கள்.

'சன்' பத்திரிகையிலே பார்க்கும் பொழுது ஒவ்வொரு நாளும் முன்னுள் பிரதம நீதியரசரொருவரின் படம் போடப்பட்டிருக்கும். படம் எடுப்பவர்களையும் கூட்டிக் கொண்டு போய் அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காணியிலே நிற்பார்—எந்தக் காணியிலோ வயலிலோ எங்களுக்குத் தெரியாது.

## சீமெந்துத் தொழிற்சாலை நிறுவியவர் ஜீ. ஜீ. அல்லர்—இப்படிக் கூறிய நவரத்தினம் இன்றும் பல்டி அடிப்பதேன்?

### பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் கேள்வி!

அந்த வயலில் விளைந்த நெல்லைப் பற்றி, பயிரைப் பற்றி கையினுல் காட்டி விளக்கிக் கொண்டிருப்பார். அந்தப் பயிரையோ நெல்லையோ விளைவிக்க எந்தவிதமான சேவையும் செய்திருக்க மாட்டார் அவர். ஆனுல் படம் பிடிக்க மாத்திரம் அங்கு செல்வார்.

### இடபமும் சிங்கமும்

இவ்விதமாக அவரையும், அவரது கருத்துக்களையும் பற்றி விளக்கி ஒரு செய்தியிருக்கும். சிங்களப் பத்திரிகைக்குச் சின்னமாகச் சிங்கத்தை பொறித்திருப்பார்கள். தமிழ்ப் பத்திரிகையான 'தினபதி'க்குச் சின்னமாக இடபத்தைப் பொறித்திருக்கிருர்கள்.

எல்லோருக்கும் எல்லாமாக நடந்து இந்த நாட்டிலுள்ள பல்வேறு இனங்களை அழித்து ஒழிக்கப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றன இப்பத்திரிகைகள்.

### இரத்தக் களரி

பத்திரிகைச் சுதந்திரமென்ருல் இத்தகைய வற்றுக்கெல்லாம் இடம் கொடுக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பிரதம அமைச்சரையும் இந்த அரசாங்கத்தையும் கேட்டுக் என்று என்று நான் அவருக்கு வேண்டுகோள் விடுத்தேன்.

அப்பொழுது வில்லியம் டி. சில்வா கைத்தொழில் அமைச்சராக இருந்தார். அவர், நாங்கள் அடுத்த தொழிற்சாலையை அம்ப



லாங்கொடையிலே ஆரம்பிப்போமே தவிர யாழ்ப்பாணத்திலேயுள்ளதொழிற்சாலையை அபிவிருத்தி செய்யமாட்டோமென்று எங்களுக்குக் கூறினுர்.

### 3-வது சூளை

ஆனுல், இன்று இந்த அரசாங்கம், சிம்மாசனப் பிர ஒதுக்கியிருக்கிறது. கூடிய விரைவில் அதைஅபிவிருத்தி செய்வார்கள் என்றே நாங்கள் நம்புகிருேம்.

### அதிகாரிகள் வேலை

சில சந்தர்ப்பங்களிலே 'தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்கார்' என்ற மாதிரியாகச் சில காரியங்கள் நடந்துவிடுகின்றன. அரசாங்கம் அதைச் செய்ய விரும்பிச் செய்ய முற்பட்டாலும் தடைக் கல்லாக இருக்கின்ருர்கள் முந்திய அரசாங்கத்திலே பழககப்பட்ட உத்தியோகத்தர்கள் சிலர். அவ்வுத்தியோகத்தர்கள் அதனைத் தடுத்துக் கொண்டு வருவதாக நாம் அறிகின்ருேம். ஒவ்வொரு இலாகாவிலும் இந்த விதமான தடைகள் இருக்கின்றன. அவற்றை நீக்குவதற்கு முந்திய அரசாங்கமாக இருந்தால் அத்தகைய உத்தியோகத்தர்களுடைய தன்மானத்திற்கோ அவர்களுடைய சேவைக்கோ மதிப்புக்கொடுக்காமல் அவர்களை உதைத்துத் தள்ளி இருக்கும்.

### உப்புத் தொழிற்சாலை

ஆனையிறவில் இன்னொரு பெரிய உப்புத் தொழிற்சாலைக்கு கைத் தொழில் அமைச்சர் ஒரு திட்டத் நிதி பல மேடைகளில் சொன்னதை நான் அறிவேன்.

ஆனுல், அப்படித் தாம் அன்று சொன்னதை இன்று விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு அவர் பேசுகின்ற காட்சியைக் காணும் போது நான் அவரை எனது முன்னைநாள் சகபாடி என்று அழைப்பதற்கு வெட்கப்படுகிறேன். பேசும்பொழுது நேர்மையோடு முன்பு பேசியவைகளைச் சிந்தித்துப் பார்த்துப் பேச வேண்டுமென்றும் அவரை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

### என். எம். சொன்னுர்

அவரது பக்கத்தில் இன்றிருக்கும் கலாநிதி என். எம். பெரேரா சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசும் பொழுது உள்ளூராட்சி அமைச்சரைப் பற்றி என்ன சொன்னுர்? டாக்டர் என். எம். பெரேரா தண்ணீர்த் திட்டங்கள் அத்தனையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத்தான் செல்கின்றன என்று அன்று குற்றம் சாட்டினுர். இதற்காக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கூடக் கொண்டு வந்தார்கள்.

வீடமைப்புத் திட்டங்கள் வடமாகாணத்தில் அச்சுவேலியில் நிறுவப்பட இருக்கின்றவே, என் அப்படி என்று அவர் ஒரு கேள்வியைக் கிளப்பினுர். இவையெல்லாவற்றையும் மறந்து உள்ளூராட்சி அமைச்சர் என்ன செய்தார் என்று கேட்கிருர் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி. அவருக்கு ஒருவேளை புங்குடுதீவில் ஒரு தண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்ற மனஸ்தாபம் இருக்கலாம்.

### தண்ணீர்த் திட்டம்

கட்டைவேலி கிராம சபைப்பகுதியில் ஒரு தண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியில் வட்டுக்கோட்டை கிராம சபைப் பகுதியில் ஒரு தண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

பட்டிருப்புத் தொகுதியில் துறை நீலாவணையில் ஒரு தண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. கல்முனைத் தொகுதியில் நற்பிட்டிமுனையில் ஒரு தண்ணீர்த் திட்டம் திறக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் எத்தனையோ திட்டங்களை ஆரம்பிக்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

புங்குடுதீவில், அனலைதீவில, காரைநகரில் தண்ணீர்த் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக எத்தனையோ நிபுணர்களை அனுப்பிப் பரிசீலனைகள் நடைபெறுகின்றன. தண்ணீர்த் திட்டங்களை ஆரம்பிக்க, அதாவது ஒரு இடத்திலிருந்து தண்ணீரை விநியோகிக்க முதலில் ஒரு இடத்தில் தண்ணீர் இருக்க வேண்டும். ஒரு கிணற்றைக் கொண்டு அந்த இடத்தில் போதிய அளவு தண்ணீர் இருக்கின்றதா என்று பரிசீலனை செய்து பார்த்துத்தான் தண்ணீர்த் திட்டங்களை ஆரம்பிக்க முடியும்.

## திருச்செல்வம் மீது என். எம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த காரணத்தை மறந்தீரோ?

கொள்வதென்ன வென்ருல், இவ்விதமாகக் கட்டுப்பாடற்ற சுதந்திரமற்ற அளவுக்கு உண்மையான செய்திகளை மறைத்து செய்திகளை வெளியிடக்கூடிய நிலைமையை நிச்சயமாக அதி சீக்கிரத்தில் நீக்கவேண்டும் என்பதே. அல்லது தங்கள் பத்திரிகைகளை விற்பதற்கு ஒரு இரத்தக்களரியைகூட இந்த நாட்டிலே ஏற்படுத்த இவ்விதமான பத்திரிகைகள் ஆயத்தமாக இருக்கின்றனவென்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன்.

### வகுப்பு வாதம்

முந்திய அரசாங்கம் வகுப்புவாத ரீதியிலே இயங்கியதும் அபிவிருத்தித் திட்டங்களை வகுப்புவாத ரீதியிலே நடாத்தியதும் நாம் எல்லோரும் அறிந்ததே!

1957 ஆம் ஆண்டு இதே சபையிலே நான் எதிர்க் கட்சி ஆசனத்திலிருந்து கொண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்திலே பேசிய பொழுது, அப்பொழுது இருநத கைத்தொழில் அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கிறது, காங்கேசன் துறைச் சீமெந்து தொழிற்சாலையின் இரண்டாவது மூன்ருவது சூளைகளை உடனடியாக ஆரம்பியுங்கள் சங்கத்திலும் வரவுசெலவுத் திட்டத்திலும் வெளியிட்டுள்ளபடி இரண்டாவது சூளையைப் பொருத்தியது மாத்திரமன்றி மூன்ருவது சூளையையும் ஆரம்பித்து காங்கேசன்துறையிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலையைப் பூரணத்துவமுடைய ஒரு தொழிற்சாலையாக—நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையாக அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### துறைமுக அபிவிருத்திக்கு 40 இலட்சம்

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்; அதையும் வர்த்தகத்துக்கான ஒரு துறைமுகமாக—பெரிய கப்பல்கள் வரக்கூடிய துறைமுகமாகத் திருத்த வேண்டுமென்று முந்திய அரசாங்கத்தை நாங்கள் பலமுறை பணிந்து பணிந்து கேட்டோம். 15, 20 ஆண்டுகளாக நாங்கள் வேண்டுகோள் விடுத்து வந்தோம். ஆனுல் 'செவிடனின் காதில் ஊதிய சங்கு' போல அது அவர்கள் காதில் ஏறவில்லை.

இந்த அரசாங்கம் காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்த வரவு செலவுத் திட்டத்தில் 40 இலட்சம் ரூபா தைத் தயாரித்து இருக்கிருர். இந்த அரசாங்கம் அதற்குத் திட்டமிட்டிருக்கின்றது என்பதை எனது நண்பர் கௌரவ ஊர்காவற்றுறைப் பிரதிநிதி நன்கு அறிவார். இப்படியாக இன்னும் எத்தனையோ நாங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்கு வழி தேட வேண்டும்.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி தாம் கடந்த இருபது வருடமாகச் சொல்லி வந்த அத்தனையையும் ஒரே கவளமாக விழுங்கி விட்டு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்க வந்துள்ள முடிவு அவரது குட்டிக் கரணம் எவ்வளவு தூரம் போய்விட்டது. அவர் எவ்வளவு தூரம் குட்டிக்கரணவீரராக மாறிவிட்டார் என்பதை நாம் மிக வேதனையோடு கவனிக்க வேண்டிய நிலையை இன்று ஏற்படுத்தி இருக்கின்றது.

### காங்கேசன் சீமேந்து தொழிற்சாலை

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை 1947 ஆம் ஆண்டுக்கு முந்திய அரசாங்கத்தினுல் உருவாக்கப்பட்டதே அல்லாமல் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரால் உருவாக்கப்பட்டதல்ல என்று ஊர்காவற்றுறைப் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைக் கடிதம்:

# தமிழ் நாடு காங்கிரசுக்குள் நடைபெறும் கோஷ்டிச் சண்டை கண்டு சந்திசிரிக்கிறது

## காமராசர் மீது பழம் பெரும் காங்கிரஸ்காரர் நெருப்பெடுப்பு

### நடவடிக்கை யெடுக்க இந்திராவுக்கு மகஜர்!

## நான் அதிகாரத்திலிருக்கும் வரை இந்திக்கு தமிழ் நாட்டில் இடமில்லை
—அண்ணா

இப்பொழுது சென்னை நகரெங்கும் அனலாக வெயில் அடிக்கும் 'சீசன்'. இந்த ''சீசனுக்கு'' பயந்து பலர் குளு குளு ஊட்டிக்கும், மற்றும் இடங்களுக்கும் ஓடுவது வழக்கம். தமிழக அரசியல் நிலைமையிலும் இப்போது சூடு பிடித்துவருகிறது.

சட்டமன்ற சபாநாயகர் பதவியிலிருந்து ஆதித்தனர் விலகியது பற்றி பலவித ஹேஷ்யங்கள் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகைப் பலமுள்ள ஆதித்தனரை அண்ணா விரோதித்துக் கொள்ளமாட்டாரென்றும், கண்டிப்பாக அவருக்கு ஒரு மந்திரி பதவி தரப்படவிருப்பதாகவும் பலமான வதந்தி சென்னை நகரெங்கும் பரவியிருந்தது.

தொழில் அமைச்சர் பதவியையே ஆதித்தன் விரும்புவதாகவும், ஆனால் அப்பதவியை இப்போது வகித்துவரும் திரு. நெடுஞ்செழியன் தம்மிடமிருந்து இழக்க விரும்பவில்லையென்றும் கூட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் இவற்றையெல்லாம் ஒரேயடியாக மறுத்துவிட்டர் அறிஞர் அண்ணா. வெப்பகாலத்தில் பொருட்கள்மட்டுமன்றி ஆட்கள்கூட விரிவடைவது வழக்கமென்றும் ஆனால், தி. மு. க. மந்திரிசபை அப்படி விரிவடையாது என்றும் தெரிவித்துவிட்டார் அறிஞர்.

ஆனால் ஆதித்தனுக்கு அண்ணா என்ன சமாதானம் கூறி சாந்தப்படுத்தி வைத்திருக்கிறாரென்று தெரியவில்லை.

தாம் சபாநாயகர் பதவியிலிருந்து விலகியது கழகப் பணிபுரிவதற்கென்றும், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே தாம் இதுபற்றி முடிவுக்கு வந்துவிட்டதாகவும் திரு. ஆதித்தன் கூறியிருந்தபோதிலும் அது ஓர் அந்தரங்க சுத்தியான அறிவிப்பு என்பதை பலர் நம்ப மறுக்கின்றனர்.

### சோதனை

தி. மு. கழகத்தின் அடுத்த பொதுச் செயலாளர் பதவியை கைப்பற்ற ஆதித்தன் முயல்வதாகவும் அதையே மறைமுகமாக கழகப் பணியென்று குறிப்பிடுவதாயும் சிலர் வியாக்கியானம் செய்கிறார்கள். ஆனால் கழகத்தில் மிகவும் பொறுப்புவாய்ந்த பொதுச் செயலாளர் பதவியை நேற்று தி.மு.க.வில் சேர்ந்த ஆதித்தனிடம் விட்டுவிட தி.மு.க. தலைவர்கள் முட்டாள்களல்லர். அத்துடன் திரு. ஆதித்தன் முறைப்படி கழகப் பொதுக்குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படவுமில்லை.

அப்படியானால் பத்திரிகை பலமுள்ள ஆதித்தனை தமது கட்டுக்குள் வைத்திருக்க அண்ணா என்ன செய்யப் போகிறார்? அண்ணாவின் திறமைக்கும் இராசதந்திரத்துக்கும் இது ஓர் சோதனையென்றாலும், அண்ணா அதில் ஜெயித்துவிடுவார் என்றே பலரும் எதிர்பார்க்கின்றனர்.

### தேர்தல் 'சூடு'

இதற்கிடையே தி. மு. கழகத்திலும் இப்போது சூடு பிடித்துள்ளது—காரணம் கழக நிர்வாகத் தேர்தல்கள் தான். இப்போது நடைபெற்றுவரும் கழகத்தின் மாவட்ட கழக நிர்வாகஸ்தர்கள் தேர்தல்கள் மிகவும் பரப்பரப்பான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளன.

ஆளும் சக்கரத்தை தி.மு.க. கையில் பிடித்த பின்னர் நடைபெறும் முதல் கழக நிர்வாகத் தேர்தல் இது தான். எனவே பரபரப்பும் துடிப்பும் ஏற்படுவது ஆச்சரியமில்லைத்தான்.

கழக நிர்வாகத் தேர்தலில், கழகத்தவர் அபரிமிதமான ஆர்வம் காட்டுவது ஒரு வகையில் ஜனநாயக வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கலாம். எனினும், சில மாவட்டங்களில் வன்முறை தலைதூக்குமளவுக்கு சம்பவங்கள் நடைபெற இடமளித்தது நிச்சயம் கழகத்துக்கு பெருமையளிக்கக்கூடியதொன்றல்ல.

மாவட்ட கழகத் தேர்தல் முடிவுகள் சில மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடியனவாயிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் சென்ற தேர்தலில் இலட்சக்கணக்கான வாக்குகளால் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியத்தை தோற்கடித்த திரு. சாமிநாதன் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டு, திரு. எஸ்.ஏ. இராசமாணிக்கத்திடம் தோல்வியடைந்தார். திரு. இராசமாணிக்கம் சாதாரண மாநகர சபை உறுப்பினராவர்.

இதேபோல நீண்டகாலமாக திருநெல்வேலி மாவட்டத்தில் கழக செயலாளராக இருந்துவந்த திரு. எம்.எஸ். சிவசாமி, திரு. இரத்தினவேல் பாண்டியனிடம்தோற்றார். ஏனைய இடங்களில் பெரும் மாறுதல் எதுவும் இருக்கவில்லை.

☆

இந்திப் பிரச்சினையில் அண்ணா உறுதியுடனேயே இருந்துவருகிறார். அண்மையில் பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர் மு. வரதராசன் படத்தை திறந்து வைத்துப் பேசியபோது தமிழ்மொழியின் ஏற்றத்துக்கும் தமிழகத்தில் இந்தி நுழையாமல் தடுக்கவும் தி. மு. கழக அரசு தனது முழு வலிமையும் பயன்படுத்தும் என்று திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறார்.

''இந்தி எதிர்ப்பை கைவிட முடியாதா'' என்று டெல்லியிலிருந்து வந்த என். சி. சி.யை சேர்ந்த அதிகாரி ஒருவர் கேட்டார். அதற்கு நான் ஒரேயொரு வழியிருக்கிறது; என்னை மாற்றிவிடுங்கள்; என்னுடைய அரசு இருக்கின்றவரையில் அது நடக்கவே நடக்காது என்று கூறிவிட்டேன். ஆனால் நீயாகப் போகிறாயா என்று கேட்டால் போகிறேன் என்று கூறமாட்டேன்; அனுப்புங்கள் என்றுதான் சொல்வேன்''

இவ்வாறு அண்ணா தெட்டத்தெளிவாக குறிப்பிட்டார்.

### சட்டமன்றத்தில்

இதுவொரு பக்கமிருக்க, சென்னை சட்டமன்றக் கூட்டத் தொடரும் இப்போது நடந்துவருகிறது; சட்டமன்றத்தில் உஷ்ணம் சகிக்கமுடியாது காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் எகிறிக் குதித்தாலும், அண்ணா அவர்கள் சாந்தமாகவே நகைச்சுவையும் கலந்து அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கும் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கும் பதில் அளித்துவருகிறார்.

கடந்தவாரம் சிறந்த சினிமாப் படங்களுக்கு 1 லட்சம் ரூபா பரிசு அளிக்கும் திட்டத்தைப் பற்றி சட்ட மன்றத்தில் அண்ணா விளங்கப்படுத்திவந்தபோது ஒரு காங்கிரஸ் உறுப்பினர் குறிப்பிட்டு பரிசுக்குரிய படத்தை தேர்ந்தெடுக்கும்போது அரசியல் நுழையாமலிருக்குமாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ளுமா என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த அண்ணா நகைச்சுவையாக ''வெளிப்படையாக நீங்கள் கேட்காமல்போனாலும் உங்கள் மனதில் என்ன நினைத்து இக்கேள்வியை கேட்டிருக்கிறீர்கள் என்பது எனக்கு தெரியும். நீங்கள் காங்கிரஸ் நடிகர் என்று எண்ணிக் கொண்டிருப்பவரும் என் தம்பிகளில் ஒருவர்தான். என்னைப் பொறுத்தவரை அரசியலும் ஒரு கலையே'' என்றாரே பார்க்கலாம் தி. மு. க. உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து சிரித்துவிட்டனர்.

மற்றோர் கட்டத்தில், ஆகஸ்ட் 1-ந் தேதியில் நடைபெற்ற பொலீஸ் தடியடி பற்றி காங்கிரஸ்காரர்கள் புகார் கூறுவது பற்றி குறிப்பிடுகையில், ''பொலீஸ் உடையில் யாரோ சிலர் வந்து அடித்தார்கள் என்ற கூற்றை நான் நன்கு விசாரித்த பிறகு சொல்கிறேன்-முழுக்க முழுக்க மறுக்கிறேன். இது வெறும் கற்பனை.

''ஸ்தலத்திலிருந்த பொலீஸ்அதிகாரிகள்கூட போலீயானவர்கள்; வேறுயாரோ அந்த உடையில் வந்து நின்று கொண்டிருந்தார்கள் என்று இன்னும் சிறிது கற்பனையை வளர்த்தி சொல்லியிருந்தால், அது நல்ல சினிமாக் கதையாகப் பயன்பட்டு, ஒருவேளை அரசாங்கம் வழங்க உத்தேசிதுள்ள பரிசும் அதற்கு கிடைக்கலாம்'' என்று நகைச்சுவை ததும்ப கூறினார் அண்ணா.

### போதனாமொழி

கடந்தவாரம் சட்டமன்றத்தில் மற்றோர் முக்கிய தீர்மானத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கிறார் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன்.

தமிழையே போதனாமொழியாக்கும் முடிவில் எந்தவிதமான மாற்றமும் செய்யப் போவதில்லையென்றும் பின்வாங்கப் போவதில்லையென்றும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

ம.பொ.சி.யின் பூரண ஆதரவைப் பெற்றுள்ள தி. மு. க. அரசு தமிழ் போதனாமொழி விடயத்தில் பினவாங்கத்தான் முடியுமா?

☆

சென்னையிலடிக்கும் வெப்பத்தால், உண்மையிலேயே விரிவடைந்துவரும் கட்சி தமிழ்நாடு காங்கிரஸ்தான். விரிவு என்று நான் குறிப்பிடுவது வளர்ச்சியை அல்ல; பிளவைத்தான்.

தமிழ்நாடு காங்கிரசுக்குள் திரு. காமராசருக்கும் திரு. சுப்பிரமணியத்துக்குமிடையே வளர்ந்துவந்த கோஷ்டிப் பூசல் இப்போது சந்தி சிரிக்கும் அளவுக்கு பகிரங்கமாகிவிட்டது. இளைஞர் காங்கிரஸ் திரு. காமராசரை ஆதரிக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் பெரும் பகுதி திரு. சுப்பிரமணியத்தை ஆதரிக்கிறது.

காமராசரின் முக்கிய கையாட்களாக கண்ணதாசன், சம்பத் ஜெயகாந்தன், போன்றோர் விளங்கிவருகின்றனர். ஆனால், பழம் பெரும் காங்கிரஸ்காரர்களான கே. டி. கோசல்ராம், சோமயாஜுலு போன்றவர்கள் திரு. காமராசருக்கு எதிராக நெருப்பெடுத்துள்ளனர். திரு. காமராசருக்கு சனநாயக சோசலிசத்தில் நம்பிக்கையில்லையென்றும், பணக்காரர்கள் பின்னால் காமராசர் ஓடுவதாகவும், காங்கிரசுக்குள் ஓர் சர்வாதிகாரியாக காமராசர் மாறிவருவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சுதந்திர தினத்தன்று திரு காமராசர் மேல் நடவடிக்கையெடுக்கக் கோரும் மகஜர் ஒன்றையும் டெல்லிக்கு சென்று திருமதி இந்திராவிடம் கையளித்துள்ளனர்.

காங்கிரசுக்குள் நடக்கும் இந்த மோதல் பற்றியும் பலப் பரீட்சை பற்றியும் தான் இன்று தமிழ் நாடு முழுவதுமேபேசப்படுகிறது. உண்மையான தேசப்பற்றுடன் போராடி இந்திய சுதந்திரத்தை பெற உழைத்த காங்கிரஸ் கட்சி, இன்று பதவியாசை பிடித்தும் கோஷ்டிப் பூசலாலும் சீரழிவதைக் கண்டு பழம் பெருங் காங்கிரஸ்காரர்களே, தம்மை காங்கிரஸ்காரர் என அழைத்துக்கொள்ள வெட்கப்பட இப்போது ஆரம்பித்துள்ளனர்.

---

### ஆவரங்கால் மேற்கு தமிழரசு வாலிப முன்னணி

14.8.69-ல் ஆவரங்கால் மேற்குப் பகுதியில் நடைபெற்றதமிழரசு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-எஸ். பூபாலன், உப தலைவர்-கே. செல்லத்துரை, இணைச் செயலாளர்கள்-கே. திரவியம்-வி. கந்தசாமி, பொருளாளர்-ஏ. கிருஷ்ணனந்தன், உப பொருளாளர்-வி. பாலசிங்கம்.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பி. நாகமுத்து, பி. மயில்வாகனம்,வி. செல்லத்துரை, வி. மயிலு, கே.சின்னராசா, எஸ். இலட்சுமிகாந்தன், எஸ். தங்கராசா, எஸ்.அனுபுத்திரன்,எஸ். கோபாலன், எஸ். தம்பு, பி.மகாலிங்கம்.

---

### திரைவாணன் திரும்பினர்

சுதந்திரன் சினிமா நிருபர் திரைவாணன் அண்மையில் தமிழகம் சென்று சேகரித்த பிரத்யேக சினிமா செய்திகள் அடுத்தவாரம் முதல் சுதந்திரனில் இடம் பெறுவதுடன்திரைவாணன் பதில்களும் மீண்டும் ஆரம்பமாகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

—ஆர்.


**ஆண்களுக்கு மட்டும்**

ரகசிய மருந்து ஆண்களுக்கு மட்டும் தயாரித்துள்ளோம்.

பலவிதமான ஜனேந்திர தளர்ச்சியினல் சோர்ந்து வாழ்க்கையில் வெறுப்படைந்து நிற்பவர்களுக்கு ஓர் கைகண்ட வரப்பிரசாதம் [மருந்து] விபரங்கட்கு எழுதுங்கள்.


வைத்திய நிபுணர்

**பி. எம். திசாநாயக்க,**

கம்பளை—தொலைபேசி: 454.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது;



செல்லமகால் (கொழும்பு) ஈரொஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்) ரீகல் (நுவரேலியா)

சுருங்கனி (கொச்சிக்கடை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

விரைவில் நெல்சன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை)

★ ரவிச்சந்திரன் ★ ஜெயலலிதா ★ நாகேஷ் ★ பாலையா
★ வி. கே. ராமசாமி ★ சுந்தரராஜன் ★ உதயசந்திரிகா
★ டி. எஸ். முத்தையா ★ சரஸ்வதி ★ விஜயஸ்ரீ

—நடிக்கும்—

# மாடி வீட்டு மாப்பிள்ளை

## 2-வது வாரமாக கெயிட்டியில்

முத்துராமன், —ராஜஸ்ரீ, நடிக்கும்—

## அனுபவம் புதுமை

---

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

வெலிங்டன் (யாழ்நகர்) விஜித (ஹற்றன்)



★ முத்துராமன் ★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ ரவிச்சந்திரன்
★ அசோகன் ★ மனோரமா
★ மனோகர்

— நடித்த —

# நான்

ஈஸ்ட்மன் கலர் சித்திரம்

---

## இப்பொழுது காட்சி தருகிறது

சபயர் (கொழும்பு) மைலன் (கொழும்பு) மொடேன் (பண்டாரவளை)

தாஜ்மகால் (கல்முனை) அயன் (மன்னார்) டிவொலி (நூரளை)

* ஜெய்சங்கர் * விஜயா

— நடிக்கும் —

# பொன்னான வாழ்வு

விரைவில்:

## நான் ஆணையிட்டால்

---

# 3 - வது மங்களகரமான மாதம்!

"பத்திரிகைகள் ஒரே குரலில் பாராட்டுகின்றன! இரசிகப்பெருமக்களின் பாராட்டுதல்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன'! வசூலில் ஓர் மாபெரும் சாதனையை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது!!! சென்னையில் 150 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிமுரசு கொட்டி இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற ஒரே சித்திரம்!

சென்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) மொடேன் (குருநாகல) ரேயல் (வவுனியா)

சென்ட்ரல் (பருத்தித்துறை) ஆனந்தா (மன்னார்) ராதா (கந்தப்பளை)



ஜெமினிகணேசன், சரோஜாதேவி, நாகேஷ், விஜயநிர்மலா, புஷ்பலதா சிவகுமார், பகவதி, எல். வரலட்சுமி, —நடித்த—

# பணமா? பாசமா?

---

## விரைவில் எதிர்பாருங்கள்!

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா ★ நாகேஸ் —நடித்த—

# தேர்த்திருவிழா

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org